உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௬] கீலக ௵ ஐப்பசி ௴ [பகுதி-௧௨.

நக்கீரனார்.

—:o:—

நக்கீரனார் வரலாற்றைப்பற்றிய செய்திகள் நம்மவரெல்லாரும் நன்கறிந்தது. ஆயினும், யான் அப்புலவர் பெருந்தகையைப் பற்றித் தெரிந்த சிற்சில விசேடங்கள் புதுமை பயக்கக்கூடுமென்று நம்பி, அவற்றையுந்திரட்டி ஈண்டெழுதத்துணிந்தேன். நக்கீரனார் வரலாறு, மதுரை மான்மியங்கள், சீகாளத்திப்புராணம், திருப்பரங்குன்றப் புராணமுதலிய நூல்களில் சிற்சில வேறுபாடுகளுடன் கூறப்படுகின்றது. அக்கதையின் சுருக்கமாவது:—

“மதுரைக் கணக்காயனார் மகனாராகிய நக்கீரனார், கடைச்சங்கத்திற் றலைமைப்புலவராக விளங்கினவர். இறையனார் திருவாய்மலர்ந்தருளிய அகப்பொருட்கு பாண்டியன் நியமனப்படி, உருத்திரசன்மர் முதலியோர் வியக்கும்படி சங்கத்தார் இயற்றிய உரைகளிலெல்லாஞ் சிறந்ததோருரையிட்டவர். வங்கிய சூடாமணிகட்டிய பொற்கிழிபெறவேண்டி, திருவாலவாயுடையாரிடமிருந்து “கொங்குதேர் வாழ்க்கை” என்னுந் திருப்பாசுரம் பெற்றுவந்த தருமி என்னும் பார்ப்பனச்சிறுவன் அக்கிழி பெறுவண்ணம், அப்பாசுரத்திற் குற்றங்கூறி மறுக்க, அவ்வாறு மறுத்தது தெரிந்து சிவபிரானே எதிரில் வந்து தர்க்கிக்க அவர்முன்னும் அஞ்சாது குற்றங்கூறி வாதித்த குற்றத்தால், பொற்றாமரையில் இறைவன்சினக்க விழ்ந்து, பார்வதியார் கூந்தற்கும் செயற்கை மணமே யென்றுகூறியபழிப்பாலே குட்டநோயடைந்து அது தீர்தல் வேண்டித் திருக்கைலையை நோக்கிச் சென்றார். செல்லுமிடையில் வழிக்கணிருந்த ஒரு தீர்த்தத்

தையும் ஆலமரத்தையுங் கண்டு அங்கேயிருந்து சிவபூசை செய்யும் போது, ஓரிலை ஆலமரத்தினின்று தடாகத்தில் வீழ்ந்து பாதிமீனாக வும் பாதிப்பறவையாகவும் மாறித் தரையிலும் நீரிலு மொன்றை யொன்று இழுத்து நிற்பதுகண்டு நக்கீரர் நிட்டை கலைந்து வியந் திருந்தனர். இங்ஙனமிருக்க, பிரமராக்ஷசு ஒன்று, இருமனப்பட் டுச்சிவபூசையியற்றும் புலவர் ஆயிரவரை ஒருசேர உண்ண எண் ணங்கொண்டு, தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மரை ஒரு குகையில் அடைத்துவைத்து, பின்னுமொருவரைத் தேடிவரும் போது சிவபூசையில் இருமனப்பட்டிருந்த நக்கீரர் அகப்பட, ஆயி ரவரானது நற்காலமென்று அவரைத் தூக்கிவந்து குகையிலடை த்து, ஸ்நானஞ் செய்துவரச் சென்றது. இவரைக்கண்ட குகையி லிருந்த ஏனைப்புலவர்கள் "ஓ! எங்கட்கு இன்றுடன் முடிவுகாலங் காட்டினையே" என்று பூதத்தின் செய்தியையும் தங்கள் செய்தியி னையும் கூறி முறையிட, அவற்றைக் கேட்ட நக்கீரர் திருமுருகாற் றுப்படையோதி முருகக்கடவுளைத் துதிக்க, அக்கடவுள் வந்தருளி அப்பூதத்தினைக்கொன்று புலவர்களைச் சிறைமீட்டனர். பின், நக்கீ ரர் அக்கடவுள் நியமனப்படி ஒரு தீர்த்தத்தில் மூழ்கி, தக்ஷிண கைலையாகிய திருக்காளத்தியில் எழுந்து குட்டநோய் நீங்கி, ஆங்குக் கோயில் கொண்டருளிய சிவபிரானைத் தரிசித்துக் கைலைபாதிகாள த்திபாதியந்தாதிபாடி முடிவில் முத்தியுமடைந்தனர்." என்பது.

நக்கீரர், மதுரைக் கணக்காயனார் மகனார் என்று கூறப்படுவர். கணக்காயர்—நூல் கற்பிக்குமாசிரியர்; "கணக்காய ரோத்துரைப் போர்" என்பது பிங்கலந்தை. "கற்றதூஉ மின்றிக்கணக்காயர் பாட த்தாற், பெற்றதாம் பேதையோர் சூத்திரம்" என்பது நாலடி. இனி நக்கீரர் சங்கறுப்போர் குலத்தைச் சார்ந்தவரென்பர். முற்கூறிய வரலாற்றில், சிவபிரானது பாடற்கு இவர் குற்றங்கூறியபோது, அக் குற்றம் உமாதேவியைப் பழிப்பதாயிருந்தமையால், அதற்கு வெகு ண்டு இறைவன் நெற்றிக்கண்ணைக் காட்டி,

அங்கங் குலுங்க வரிவாளி னெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவியை
ஆராயு முள்ளத் தவன்."

என்றிழித்துரைக்க, அதற்கு நக்கீரர் அஞ்சாது, "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே" என்று கூறி, அக்கடவுள் தம் குலத்தையிழித்ததற்குப் பிரதியாக,

> சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனார்க் கேதுகுலம்
> பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ—சங்கை
> யரிந்துண்டு வாழ்வோ மரனேநின் போல
> இரந்துண்டு வாழ்வ திலை."

என்று இறைவனை இழித்துரைத்தனரென் நூல்களிற் *கூறப்படுகின்றது. இப்பாடல்களால், சங்கறுத்து வளையல் முதலியவை செய்துவந்த குலத்துதித்தவர் நக்கீரர் என்பது விளங்கும். இக்குலத்தவர், முற்காலத்துத் தனியே யிருந்தன ரென்பது, "விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோ, டிலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும்" என்னும் மணிமேகலையடிகளானும், "ஒளிவளை போழ்நர் சங்கறுப்போரே" என்னும் பிங்கலந்தை யானும் உணர்க. இக்குலத்தவர் நான்காம் வருணத்தவரென்பது பலர் கருத்து. ஆனால், முற்காலத்தே, பிராமணரில் ஒருசாரார் இத்தொழில் செய்து வந்தனரென்பது, ஆராயும்போது வெளியாகின்றது. அகநானூற்று ௨௪-ஆம் பாட்டாகிய, ஆவூர் மூலங்கிழார் வாக்கில்,

> "வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
> வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன
> தளைபிணி யவிழாச் சுரிமுக பகன்றை."

என்னும் அடிகள் வருகின்றன. "யாகம்பண்ணாத வூர்ப்பார்ப்பான்-இவர்களுக்குச் சங்கு அறுக்கையுந் தொழில்; வளை அரம் களைந்தொழிந்த கொழுந்து-சங்கின்தலை". என்பது இவ்வடிகளின் பழைய உரை. இவற்றால், சங்கறுக்கை, பார்ப்பாரில் ஒரு சாரார் தொழில் என்பது வெளியாகின்றதன்றோ? சிலப்பதிகாரம் இந்திரவிழ வூரெடுத்தகாதையில், "திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையோ, டணிவளை போழுநர்" என்று கூறுதலால், இக்குலத்தோர் வேட்டலொழிய, ஒழிந்தவேட்பித்தல் ஓதுவித்தல் முதலிய "சிறந்தகொள்கை" களையுடையவராதல் வேண்டுமென்று கருதப்படும். இச்"சிறந்தகொள்கை" க்கேற்ப, நக்கீரர் தந்தையார், ஒத்துரைப்போர் என்னும் பொருளு

* திருவாலவாயுடையார் திருவிளையாடல் முதலியன.

டைய கணக்காயனர் என்ற பெயர்பெற்றிருத்தலுங் கவனிக்கத் தக்கது. [ஓத்து - ஆசிரியர்மூலம் ஓதற்குரியவேதங்களும் அதனங்கங்களும்.]

இனி, "கீர் கீர் என அறுக்குங் கீரனோ என் கவியை ஆராயு முள்ளத்தவன்" என்பதுபற்றி நம்புலவர்பெருந்தகைக்கு "கீரர்" என்ற பெயர் வழங்கியதாகச் சிலர் கூறுவர். "கீர்கீரெனவறுக்கும்" என்பது சங்கறுத்தலிலுள்ள ஒலியைக்குறிப்பிட்டபடியே யொழிய, கீரனென்னும் மொழிக்குப் பொருள் கூறவந்ததன்று; வந்ததாயின், இடையனெடுங்கீரனர் என வேறு குலத்தவர்க்கும் இச்சொல்வழங்குதல் பொருந்தாதாம். ஆதலால், கீரனென்பது வாக்மியென்னும் பொருளில் வந்த வடமொழித்திரிபான பெயரென்க. இனி, நக்கீரர் என்பதிலுள்ள "ந என்பது சிறப்புப்பொருளுணர்த்துவதோரிடைச்சொல். நச்சென்னை, நப்பாலத்தன், நப்பின்னை என்றாற்போல; நம் கீரன் (என்பதன்) விகாரமுமாம்" * ஆகவே, நக்கீரன் என்பது சிறந்த நாவலன் என்னும் பொருள்பெறும்.

இனி, தருமி என்னும் பார்ப்பனச் சிறுவன், பொற்கிழி பெற வேண்டிச் சிவபிரானால் அளிக்கப்பெற்ற "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி" என்னும் பாசுரத்தை அரசனேவலாற் சங்கத்தார் முன் காட்ட, நக்கீரர் அப்பாட்டுக் குற்றமென்று கூற, தருமி மனநொந்து திரும்பிச் சிவபிரானிடம் நிகழ்ந்தவரலாற்றைக் கூறி முறையிடலும், அப்பெருமானிரங்கித் தாமே புலவருருவந்தாங்கி நக்கீரர் முன்னின்று, "இப்பாடலிற் குற்றம் யாது" என்று கேட்க, நக்கீரர் அதிற்குற்றங்களைக் கூறினர். உடனே சிவபிரான் வெகுண்டு, தம்நெற்றிக்கண்ணைக் காட்ட, நக்கீரர் அதன் முன் நிற்க ஆற்றாது பொற்றாமரையில் வீழ்ந்தனரெனவும், அக்குற்றத்தால் குட்டநோயும் அவரையடைந்ததெனவும் கூறப்படுகின்றன. இவ்வரலாறுகள் நக்கீரனர் வாக்கிலும், ஏனைப்பெரியோர்கள் வாக்கிலும் குறிப்பிடப்படுகின்றன. பதினொராந் திருமுறையைச் சேர்ந்தனவும்,

---

* சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், ௭௪-ஆம் செய்யுட்கு நச்சினார்க்கினியர் எழுதியவுரை.

நக்கீரனார் இயற்றியவுமான திருவெழுகூற்றிருக்கையிலும், பெருந் தேவபாணியிலும்,

“சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதஞ் சென்னியுட் பரவுவன் பணிந்தே”

“பணிந்தேனின் பாதம் பரமேட்டி பானீ
றணிந்தால வாயி லமர்ந்தாய்—தணிந்தென்மேன்
மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே
ஐயுறவொன் றின்றி யமர்ந்து” எனவும்;

“கூட லாலவாயக் குழக னுவது
அறியா தருந்தமிழ் பழித்தன னடியேன்
ஈண்டிய சிறப்பி னிணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே”

“விரைந்தேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தே னெளியேன்—விரைந்தென்மேற்
சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே
ஆற்றவுநீ செய்யு மருள்.

எனவும் முறையே வருதல் காண்க. இவ்விஷயத்தைத் திருநாவுக்கரசுநாயனாரும், “நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி நற்கனகக்கிழி தருமிக் கருளினோன் காண்” எனத் திருப்புத்தூர்ப்பதிகத்தில் கூறியருளினர். கல்லாடத்தில்,

“பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறி
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
என்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குங்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்” எனவும்,

“அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங் களத்தினன்”

எனவும் கூறப்பட்டன.

இனி, பதினொராந்திருமுறையில் அடங்கியனவும் நக்கீரனாரியற்றிய வுமான, திருவெழுகூற்றிருக்கை முதலியவற்றைப் பழையஉரையாளர் எடுத்தாளாமையாலும், வாக்கின் போக்காலும், பிறவற்றாலும் அவை பிற்காலத்து ஆசிரியரால் இயற்றப்பட்டன வென்றுகருதி, அவை நக்கீரனாராலியற்றப்பட்டவை என்பதில் நம்பிக்கை கொள்ளாது போயினர், காலஞ் சென்ற ஸ்ரீ சுந்தரம்பிள்ளை (M. A.) முதலியோர். இது பெருந்தவறான அபிப்பிராயமென்பதில் ஐயமில்லை. முன்னோர்கள் காலத்தை, செய்யுளின் நடைப்போக்கால் அளத்தல் கூடாததாம். பத்துப்பாட்டு முதலியவற்றினடைகளோடு, அவற்றின் காலத்தே எழுந்த மணிமேகலை முதலியவற்றின் நடை எத்துணை வேற்றுமை கொண்டுளது? இவ்விஷயங்கள் முன்னூல்களையாராய்வார்க்குத்தெள்ளிதின் விளங்கும். இனி, பழைய உரையாசிரியரால் மேற்கூறிய நூல்கள் எடுத்தாளப்படவில்லையென்பதுந் தவறு. நக்கீரியற்றிய 'ஓருடம்பிருவராய்'' என்னும் திருவெழுகூற்றிருக்கை, யாப்பருங்கலவிருத்தியில் "மாலைமாற்றே சக்கரஞ்சுழிகுளம்" என்னுஞ் சூத்திரத்து, எழுகூற்றிருக்கைக்கு உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டுளது. இவ்வாறே, கபிலதேவர் பாடிய மூத்தநாயனார் திருவிரட்டைமணி மாலையிலுள்ள "கனியுநினைவொடு" நல்லார் பழிப்பில்'' என்னும் இரண்டு செய்யுட்கள், தொல்காப்பியச்செய்யுளியற்குள்ள உரையாசிரியர் உரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. (செந்தமிழ். தொ-௨; பக்-௧௧௮) இவற்றால், பழைய உரையாளர் பதினொராந் திருமுறையிலுள்ள கபிலர் நக்கீரர்களது நூல்களை மேற்கோள் காட்டவில்லையென்பதும் பொருந்தாதாம்.

இனி, நக்கீரனார் சாவவும் கெடவும் பாடவல்ல தெய்வப்புலவரென்பதற்கு அவர் "நாடத்துக் குயக்கொண்டானைச் சாகவும் வாழவும் பாடிய" * அடியில் வரும் அங்கத வெண்பாக்களான் விளங்கும்.

(சாவப்பாடியது)

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—யரணிலா

* இவ்வாறு தமிழ் நாவலர் சரிதையிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா

(பிழைக்கப்பாடியது.)

ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையினாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா" என்பவை.

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தே பேராசிரியர், இவ்வெண்பாக்களை எடுத்துக்கூறி, "இவை, தெற்கில் வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு, நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடி, இன்னவாறாக வெனச் சபித்தற் பொருட்டாய் வந்த மந்திரம் பாட்டாய்வருதலின் அங்கதமாயின" என்று—'நிறைமொழிமாந்தர்" பெருமைக்கு—நக்கீரர் வாக்கினை எடுத்துக் கூறுதல் காண்க. இதனால், கடைத்தமிழ்ச் சங்கத்துக்குத் தெற்குப்பக்கத்தில் வடமொழிச்சங்கமொன்று இருந்ததென்றும், அச்சங்கத்தார்க்கும் தமிழ்ச்சங்கத்தார்க்கும் வாத நிகழ்ந்ததென்றும் தெரிகின்றது. இனி,—

நக்கீரனார் இயற்றிய நூல்கள்.

௧.	திருமுருகாற்றுப்படை	௯.	காரெட்டு
௨.	நெடுநெல்வாடை	௧௦.	போற்றித்திருக்கலிவெண்பா
௩.	கைலைபாதிகாளத்திபாதி யந்தாதி	௧௧.	கண்ணப்பதேவர் திருமறம்
௪.	திருவீங்கோய்மலை எழுபது	௧௨.	குறுந்தொகை (சில பாடல்கள்)
௫.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	௧௩.	நற்றிணை (சில பாடல்கள்)
௬.	திருவெழுகூற்றிருக்கை	௧௪.	அகநானூறு (சில பாடல்கள்)
௭.	பெருந்தேவபாணி	௧௫.	புறநானூறு (சில பாடல்கள்)
௮.	கோபப் பிரசாதம்	௧௬.	நக்கீரனாரடிநாலு.

இவற்றில், "நக்கீரனாரடிநாலு" என்னும் நூல் யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோள்காட்டப்பட்டுளது. மேற்கூறிய நூல்களில் விளங்கும் சொற்பொருணயங்கள் அறிஞர்க்குப் பேரானந்தம் விளைப்பனவாகும். இவர், திருவள்ளுவரைப்பற்றித் "தானேமுழுதுணர்ந்து" என்னும் பாயிரமும் அருளியிருக்கின்றனர்.

நக்கீரனாராற் பாடப்பெற்ற. அரசர்களாவார்:— பாண்டியன் நெடுஞ்செழியன், உக்கிரப்பெருவழுதி, பாண்டியன் நன்மாறன், கிள்ளிவளவன், கரிகாலன், சேரன் ஆதன் முதலியோர்.

"மதுரை மேலைமாசிவீதியில் நக்கீரர் கோயில் ஒன்று தனியே பெரிதாகவுள்ளது. இது சங்கத்தார்கோயில் எனவும் வழங்கும்; ஆவணித்திருவிழா நான்காந்திருநாளில், நடைபெறும் கிழியறுத்தலுற்சவத்துக்கு இக்கோயிலினின்று கபிலபரணர் திருவுருவங்கள் எழுந்தருளுவதுண்டு. அன்றியும், திருப்பரங்கிரிக் கோயிலில், ஸ்ரீமுத்துக்குமாரசுவாமியின் பக்கத்தே,நக்கீரனார் திருவுருவமொன்றுண்டு. திருப்பரங்குன்றத்தில் ஒவ்வொருவருடத்தும் நடக்கும் பங்குனித் திருவிழாவின் நான்காந்திருநாளில், முருகக்கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய திருவிளையாடல் நடக்கும்பொழுது, இந்த மூர்த்தி எழுந்தருளுதல் மரபு" * என்பர்.

இவையன்றி, நக்கீரனார், இறையனார் அகப்பொருட்கு அரியதோர் உரைகண்டு அதனை உருத்திரசன்மர் முன் அரங்கேற்றிய வரலாறு,அக்களவியற்பாயிரத்து விளங்கக்கூறப்பட்டுள்ளது. இதனை,

"மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறிய நீயே யாதலின்".

என்னும் கல்லாடவடிகளானு முணர்க.

இவ்வாறு, தெய்வப்புலமை நக்கீரனார் கடைச்சங்கத்தை அலங்கரித்த செய்திகளிற்சில தொகுக்கப்பட்டனவாயினும், பின்னும் பல விஷயங்களிருத்தல்கூடும். அவற்றை அறிஞர்வாய்க் கேட்டுக்கொள்க.

பத்திராசிரியர்.

---

* திருவாலவாயுடையார் திருவிளையாடல்,— மஹாமஹோபாத்யாயர்-ப்ராம்மஸ்ரீ: வே. சாமிநாதையரவர்கள் குறிப்புக்களிற் கண்டுகொள்க.

ஊழும்-முயற்சியும்.

—————:o:—————

இவ்வுலகத்தை ஆக்கியளித்தழிக்கும் இறைவன் எல்லாப் பிராணிகளுடைய இதயத்தும் விளங்கிநின்று, அப்பிராணிகள் செய்தற்குரிய கர்மங்களெல்லாவற்றையும் முறையே செய்துவருமாறு அவைகளை நியமித்து வருகின்றானென்றும், அவ்விறைவன் நியமனமின்றியே பிராணிகள் எக்காரியத்தையும் செய்யுமாற்றலுடையனவல்லவென்றும், ஜீவான்மா தான் சுவதந்தரனாகாது, பரமான்மாவின் நியமனத்தாலேயே எல்லாக்காரியங்களையும் இயற்றுகின்றானென்றும் அநேகர் கருதுகின்றனர். அறிஞர்கள்கூட, தமக்குத் துக்க நேருங்காலத்தில் "இப்பாழ்ந்தெய்வம் இவ்வாறு செய்துவிட்டது; தெய்வத்துக்குக் கண்ணில்லை" என்றிவ்வாறாகக் கூறிவிடுகின்றனர். இங்ஙனம், தெய்வத்தாற் சகலகாரியங்களும் நடத்தப்படுகின்றன என்பதுண்மையானால், இறைவன் நியமனப்படி நடந்துவரும் ஜீவனுக்கு சுகதுக்கங்கள் உண்டாதல் நியாயமாகுமா? மனிதனுக்கு சுவதந்திரமில்லையாயின் அவன் வருந்தி முயற்சிசெய்வதாற் பயனென்னை? இவ்விஷயங்களைச் சிறிது ஈண்டு ஆராய்வோம்.

ஈசுவரன் ஒவ்வொரு பிராணியையும் தன்நியமனம்போலவே நடத்துகிறானென்றும், பிராணிகட்கு சுவதந்திரமாக ஒன்றுஞ் செய்யும் ஆற்றலில்லையென்றும் சொல்வதற்கு, "தேநவிநா த்ருணமபி நசலதி"—"அவனன்றியோரணுவுமசையாது" என்பதுபோன்ற சுருதிகளைப் பிரமாணமாகச்சொல்வர் சிலர்; பின்னுஞ்சிலர், இறைவன் ஆணைப்படியே பிராணிகள் எல்லாக் கன்மங்களையும் செய்கின்றனவாயினும் ஜீவனுக்குச் சிற்சில அற்ப விஷயங்களில் பகவான் சுவதந்திரமளித்திருக்கிறார் என்று கூறுவர். இவ்வாறு, பிராணிகள் நல்வினை தீவினைகளைச் செய்வதற்கு நியாமகன், தெய்வம் அல்லது ஈசுவரனே என்று நம்புவது பெருந்தவறான அபிப்பிராயமாகும்.. பகவான், ஒவ்வொரு பிராணியையும் "இன்ன கல்வியை அப்பியசி; இன்னவியாபாரத்தைச் செய்; இன்ன ஸ்திரீயை மணம்புரிந்து இவ்விதம் அநுபவி; இன்னின்ன ஆகாரத்தை உண்; கொலைசெய், திருடு, அசத்தியஞ்

செய்" என்றிவ்வாறு நியமித்துவர, அவ்வாறே உலககாரியங்கள் நிகழ்கின்றன என்பதாயின், ஈசுவரனேவிடத் துக்கியாவாறெருவனு மேயிரான். ஏனெனில், ஒவ்வொருநாளும் ஈசுவரன் அவ்வப்பிராணி கட்கு, அவை செய்யவேண்டிய வேலைகளைத் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டிய பெரும் பாரம் அவனைப்பெரிதும் பொறுக்குமன்றே.

அன்றியும், இறைவன் கட்டளைப்படியே நடப்பவன் செய்து போந்த காரியங்களாலுண்டாகும் சுகதுக்கம், புண்ணியபாவம், சுவர்க்கநரகம் முதலியவை, நியமித்தவனை அடையுமேயன்றிப் பராதீனனைப் பகவான் ஏவற்படி நடந்த ஜீவனைச் சாராவாம். இன்னும், மனிதன் அறிந்து அனுஷ்டிப்பதற்கன்றே, சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணாதி சாஸ்திரங்கள் ஏற்பட்டுள்ளன? மனிதனுக்குச் சுதந்திரமில்லையாயின், இந்தசாஸ்திரங்களும் பயனற்றவைகளாம். ஏனெனில், சத்கருமங்களைச் செய்தவனுக்கு நற்பயனையும், துஷ்கருமங்களைச்செய்தவனுக்குத் தீப்பயனையும் சாஸ்திரங்கள் விதிப்பது வீணன்றே. இனி, சிற்சில அற்பவிஷயங்களில் மட்டும் மனிதனுக்கு சுவதந்திரமேற்பட்டுளதென்பதுந் தவறுனதே. ஏனெனில், இன்னின்ன காரியங்களில் மனிதன் சுவதந்திரன்; இன்னின்னவற்றைச் செய்ய பகவானே ஏவுகிறுர் என்று சாஸ்திரங்களில் யாதோர் நியமனமுஞ்செய்யப்பட்டதில்லை. இல்லையாகவே, எதனைக்கொள்வது, எதனைத்தள்ளுவது என்று ஒன்றுனுமறிதலின்றி மனிதன் காரியங்களைச் செய்தலுங் கூடாதாம்.

இவற்றால், மனிதன் ஸர்வசுவதந்திரமுள்ளவனென்றும், அவன் செய்யுங் காரியங்கள், நல்லது கெட்டதென்பவற்றைச் சாஸ்திரங்களைக்கொண்டு தன் புத்தியால் நிச்சயித்து அதன்படியே ஒழுகக்கடமைப்பட்டிருக்கிறுனென்றும், அங்ஙனம் அறியாமல், தீவினைகளைச் செய்வதனுலுண்டாம் பயனை, அவனே அடைதற்குரியனென்றும், "ஸாக்ஷீசேதா கேவலோ நிர்க்குணச்ச" என்னும் சுருதிவாக்கியப்படி, ஈசுவரன், யாதொரு விகாரமுமின்றி, ஜீவர்களது செய்கையைப்பார்த்துக்கொண்டு சாக்ஷியாய் மட்டுமுள்ளானேயல்லது, அவனுக்கு வேறு சம்பந்தமொன்றும் இல்லையென்றும் நாம் தெளிவாக ஊகித்தறியலாம். ஆகவே, ஈசுவரன் துக்கத்தைக் கொடுத்தான், சுகத்தை

யளித்தான் என்பது முதலிய அபிப்பிராயங்கள் தவறானவையே. மனிதனுக்குச் சுகதுக்காதி யனுபவங்கள் தன்னுடைய பூர்வகர்மத்தின் பலனாகவுண்டாகின்றனவேயன்றி, இறைவன் அவ்வனுபவங்களை யளிக்கிறானென்பதில்லை. மனிதன் தன்னுடைய முயற்சியினாலேயே நற்கதியடைதற்குரியனென்பதே சாஸ்திரங்களின் நிச்சயம்.

> "நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
> நிலைகலக்கிக் கீழிடு வானு நிலையினும்
> மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
> தலையாகச் செய்வானுந் தான்." (நாலடி)

இது விஷயம், மஹாபாரதம் ஆநுசாஸநிகபர்வம் ஆறும் அத்யாயத்தில், மிகவழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பிரமதேவரைப்பார்த்து, அவர் புத்திரரான வசிஷ்ட மஹருஷி, "தெய்வம் சிறந்ததா? ஆள்வினை (முயற்சி) சிறந்ததா?" என்று வினவ, பிரமதேவர் அடியில் வருமாறு கூறுகிறார். "விதையன்றி ஒன்றும் (மரம் செடி கொடி) உண்டாவதில்லை. விதையன்றி (தானியமுதலிய) பலனுமில்லை. விதையினாலேயே விதையுண்டாகின்றது. உழுது பயிர்செய்வோன், பூமியில் எப்படி விதையை விதைக்கின்றானோ, (அந்த விதை) நல்லதோ கெட்டதோ அதற்குத்தக்க பலனையடைகின்றான். விதை விதைக்கப்பெறாத பூமியானது எங்ஙனம் பலனையளியாதோ அவ்வாறே தெய்வமானது(சஞ்சிதகர்மம்) *புருஷனுடைய பிரயத்தனமன்றிப் பலனைக் கொடாது. புருஷப்பிரயத்தனம் பூமியினுடையஸ்தானமாகவும், தெய்வம் விதையினுடைய ஸ்தானமாகவும் சொல்லப்படுகிறது. பூமியினுடையவும் விதையினுடையவும் சேர்க்கையினால் பயிர்கள் விருத்தியடைகின்றன. கருமத்தைச்செய்கிறவன் அக்கருமத்திற்குரிய முழுப்பயனையும் தானே அநுபவிக்கின்றான். உலகத்திற் செய்ததுஞ் செய்யாததுமாகிய (கரும) பலன் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகிறது. (எங்ஙனமெனில்) சுபமான கர்மத்தால் சௌக்கியத்தையும் பாபகர்மத்தால் துக்கத்தையும் அநுபவிக்கிறார்கள். எந்தக்கருமமானது செய்யப்பட்டதோ, அதன் பலன் எவ்வி

---

* "தெய்வம், ஊழ், பால், முறை, உண்மை, நியதி, விதி என்பன ஒருபொருட் சொற்கள்."

டத்திலும் (லோகாந்தரங்களிலும்) உண்டாகிறது. செய்யப்படாதது சிறிதேனும் அநுபவிக்கப்படுகிறதில்லை. (நற்கருமம்) செய்தவன் பாக்யத்துடன் கூடியநிலையை எங்கும் அடைகிறான். செய்யாதவனோ காரம்வைக்கப்பட்ட புண்போல எரிக்கப்படுகிறான்......... தேவதைகள், நாகங்கள், யக்ஷர்கள், சந்திரன், சூரியன், வாயு, மற்றுமுள்ள ஒளிபொருந்திய நக்ஷத்திரகிரகாதிகள்—இவர்களெல்லாம், மனிதர்களாயிருந்து புருஷப்பிரயத்னத்தாலேயே தேவத்துவத்தையடைந்தார்கள்.........உலகத்தில் தெய்வத்தை எதிர்பார்த்து அலக்ஷியமாய் (ஒன்றுஞ்செய்யாமல்) இருக்கக்கூடாதன்றோ. எவன் மனிதன் செய்யவேண்டிய கர்மத்தைச்செய்யாமல், தெய்வத்தை எதிர்பார்க்கின்றானோ, அவன் நபும்ஸகனைக் கணவனாயடைந்த மனைவிபோல் வீணாக சிரமத்தையடைகிறான். சுவர்க்கலோகத்தில் அந்நியனால் (அசுரரால்) எப்படி பயமுண்டாகிறதோ அப்படி, மனுஷியலோகத்தில் அந்நியனால் பயமுண்டாகிறதில்லை. (ஆனால்) சுபாசுபகருமங்கள் பயத்துக்குக் காரணமாகின்றன. செய்யப்படும் புருஷப்பிரயத்தனமாகிற கருமமானது தெய்வத்தைப்பின்றொடர்கிறது. ....கருமமில்லாமற்போனால் தெய்வம் எப்படியிருக்கும்? (என்றால், சஞ்சிதகருமத்துக்கு இருப்பில்லையென்பது கருத்து) எப்படித்தான் பலனைக்கொடுக்கும்? மனிதன் தனக்குத்தானே பந்து; தனக்குத்தானே சத்துரு; தபஸ், நியமம் இவற்றோடு கூடினவர்களாயும் கடினவிரதமுள்ளவராயுமிருக்கிற முனிவர்கள் தெய்வபலத்தாலேயோ சாபத்தைக்கொடுக்கிறார்கள்? இல்லை. ஆனால், தபஸ்முதலிய கருமபலத்தாற்றான். உலகத்தில் எந்த மனிதன் மிகவும் அரியவற்றையெல்லாம் அடைந்து பாவத்தை நீக்கிக்கொள்ளுகிறானோ அவனையும், லோபமோகங்களையுடைய மனிதனையும் தெய்வம் ரக்ஷிப்பதில்லை. அக்கினியானது அற்பமாயிருந்தாலும் காற்றலைசைக்கப்பட்டால் எவ்வாறு விருத்தியடைகிறதோ, அதுபோல, சஞ்சிதகருமமாகிற தெய்வமானது புருஷப்பிரயத்தனத்தோடு சேர்ந்து நன்றாய் விருத்தியடைகிறது. எண்ணெயில்லாது போனால், தீபமானது எவ்வாறு குன்றுமோ, அவ்வாறு, மனிதன் முயற்சியில்லையாயின் கருமமானது குன்றும்.........இவ்வுலகத்தில், தெய்வமானது, (கருமபலனை) வேறுவிதமான பலனையுடையதாகவேனும், விரோதமானபய

லை அளிப்பதாகவேனும் செய்கிறதில்லை. தெய்வமானது, இந்த விஷயத்தில், பிரபுவாக ஆகிறதுமில்லை."

இவ்வாறே, மச்சபுராணம், ௨௨-ம் அத்யாயத்து "முந்திய ஜன்மங்களில் அடைந்திருந்த தேகத்தினாலே சம்பாதிக்கப்பட்ட தன்னுடைய கருமமே தெய்வமென்ற பெயருடையதென்றறி; ஆகையால் இவ்வுலகத்தில் புருஷப்பிரயத்தனமே சிரேஷ்டமானதென்றறி;" என்று கூறப்பட்டிருத்தலோடு, பகவத்கீதையிலும், (அத். ௬. ௫-௬.) (ஒவ்வொருவனும்) தன்னாலேயே தன்னைக் கரையேற்றிக்கொள்ள வேண்டியது. தன்னைக்கெடுத்துக்கொள்ளலாகாது; (ஏனென்றால்) தனக்குத்தானே பந்து; தனக்குத்தானே சத்துரு" என்று கூறப்பட்டிருக்கிறது.

இப்பிரமாணங்களால், புருஷப்பிரயத்தனத்தாலே சம்பாதிக்கப்பட்ட கருமபலனானது தெய்வமென்கிற பெயரால் சொல்லப்பட்டிருக்கின்றதே யன்றி, ஈசுவரன் அல்லனென்பது தெளிவாகின்றது. இவ்வாறே, அமரத்திலும் சப்தஸ்தோமத்தும் சொல்லப்படுகின்றது. இனி, கருமங்களுக்குப் பலனை யளிப்பவன் ஈசுவரனல்லனென்றால் நியாமகன் என்று அவனை எவ்வாறு சொல்லக்கூடுமெனின், இறைவன் ஆணைக்கு அஞ்சியே சகலரும் தத்தந்தொழிலைச் செய்கிறார்கள்; அவன் சாக்ஷிபூதனாக நிற்றல் மாத்திரையே என்க. இதே விஷயம், கடவல்லியுபநிஷத் (௬. ௩-) தில் "இந்தப்பரமாவுக்கு பயந்துதான் அக்கினியும், சூரியனும் பிரகாசிக்கிறார்கள்; இந்திரனும் வாயும் யமனும் தத்தம் தொழிலைச் செய்கின்றனர்" என்று வருதல் காண்க.

இக்கருத்துக்களை உட்கொண்டே, தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், தமது அருமைத்திருக்குறளில், தெய்வமாகிய ஊழை யுணர்த்த ஓரதிகாரமும் முயற்சியின் வலியை யுணர்த்த ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை எனநான்கு அருமையான அதிகாரங்களையும் அடுத்தடுத்து அமைத்தருளினர். இவற்றுள்:—ஊக்கமுடைமையாவது, மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல்; மடியின்மையாவது கருதியவினைசெய்

யுங்காற் சோம்புதலில்லாமை; ஆள்வினையுடைமையாவது, சோம்பலில்லாவிடத்தும் மென்மேலும் முயற்சியிருந்தாலன்றிக் காரியமுடியாதாகையால், இடைவிடாமுயற்சி; இடுக்கணழியாமையாவது தொழிலில் முயல்பவன் தெய்வத்தானாக, பொருளின்மையானாக மெய்வருத்தத்தானாக, துன்பம் நேரிட்டவிடத்து மனங்கலங்காமை; இவ்வாறு முயற்சியை, எதிர்மறை முகத்தானும் உடன்பாட்டு முகத்தானும் தெய்வப் புலவர் வற்புறுத்தியதை நோக்குமிடத்து ஊழினும் அதன்வலி பெரிதும் விளங்குகின்றதன்றோ. இக்கருத்து அடியில் வருந் திருக்குறள்களில் தெளிவாகவும் கூறப்படுகின்றது.

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

நுண்பொருண்மாலை.

௧௧ ப் அதி - செய்ந்நன்றியறிதல்.
(முற்றொடர்ச்சி.)

---

௧௦௧. "செய்யாமற்செய்த........மாற்றலரிது"

நு - லை:—முதற்செய்யாதிருக்க வென மல்லீறுபெற்ற செயவெனெச்சத்து எதிர்மறைப்பொருள்பட்டது. செய்யாமை செய்யாதிருத்தல் என மையீறு பெற்ற தொழிற் பெயர். அது, பொய்யாமை பொய்யாமை......செய்யாமைசெய்யாமைநன்று" (௨௯௨) என்பதன்கண்ணும் இதன் பக்ஷாந்தரத்துங் காண்க.

௧௦௨. "காலத்தினாற்செய்த........மாணப்பெரிது"

நு - லை:—எல்லைக்கண் என்றதனால் உருபு மயக்கம். இனி, உருபுமயக்கம் பொருண்மயக்கம் என இரண்டு. தம்பொருளிற் றீர்ந்துசெல்வது உருபுமயக்கம். தம்பொருளிற்றீராது பிறிதொன்றன்பொருட்கட்செல்வது பொருண்மயக்கம். "அன்னபிறவுந்தொன்னெறி பிழையாது, உருபினும் பொருளினு மெய்தடு மாற, இருவயி னிலையும் வேற்றுமை யெல்லாம், திரிபிட னிலவே தெரியுமோர்க்கே" (தொல். சொல். வேற்றுமை மயங்கியல். ௧௮.) என்பதனானும் அறிக. வேற்றுமை மயக்கம் பெரும்பான்மை வருதலின், பொருண்மயக்கம் சிறுபான்மை எழுதியதென்க. காலத்தின்கண் என்பது, மாரியுள்வந்தான், ஆகாயத்தின்கட்பருந்து, வடக்கின்கண்வேங்கடம் என்பனபோல ஆதாரமல்லாத அருவப்பொருளை ஆதாரமாக்கியவாறு. இதனை வடநூலார் "அதீந்திரியப்பிரமாணம்' என்பர்.

௧௦௩. "பயன்றூக்கார்........கடலிற்பெரிது."

நு - லை:—கடலின் என்றது, ஐந்தனுறழ்பொருவின்கண் வந்தது. உறழ்பொரு, உவமப்பொருவென இரண்டாம். உறழ்தல் ஒத்தலும் மிகுதலுமாய் நிற்பது. "அறனழீஇ யல்லவை செய்தாரிற்றீதே" (திருக். ௧௮௨.) "கொலைமேற்கொண்டாரிற்கொடிதே'' (௫௫௧) என்பவற்றுள், "உறழ்ச்சிநிரனிறை, பான்மயக்குறழ்ச்சி" என்பனவும் அது. பான்மயக்கும் நிரனிறையும் பிறிதோரிலக்கணங்கூட்டி எழுதியதென்க.

௧௦௪. "தினைத்துணைநன்றி........பயன்றெரிவார்"

நு - லை:—தினைபனை-சிறுமை பெருமைகட்குக் காட்டும் அளவை. தொல்காப்பியரும் "பனையென்னளவுங்காவென்னிறையும்" (தொல்-எழுத்ததி-௧௬௯) என்றார். காமத்து(ப்பாலு)ள், "காமமுநாணுமுயிர் காவாத்தூங்கும்" (திருக்-௧௧௬௩) என்பதும் அது.

௧௦௫. மறவற்க மாசற்றார்........துப்பாயார் நட்பு.

நு - லை:—மறுமைக்குறுதியும் உடன்கூறியது-மாசற்றார் கேண்மை.

கဝ௬. கொன்றன்ன..........றுள்ளக்கெடும்.

நு - லை:—கெடுமென்பது இல்லையாமென நின்றது. இவ்வாறு, "அதுவெ னுருபுகெடக் குகரம் வருமே" (தொல்-சொல்-௯௪) என்பதற்கு, அவ்வுருபு இல்லையாகக் குகரம் வருமெனச் சேனாவரையரும் உரைத்தார்.

௧௧௦. எந்நன்றிகொன்.........கொன்றமகற்கு.

நு - லை;—உய்வில்லை யென்பதற்கு அஃதில்லை என்றுரைத்து, சுட்டொடு புணராத பொருள்படுதலாக்கினர்.

நடுவு நிலைமை.

---

௧௧௧. தகுதியெனவொன்று.........டொழுகப்பெறின்.

நு - லை:—"ஊரானோர் தேவகுலம்" என்பதுபோலப் பகுதி தொறுமென, ஆனுருபுதொறுமென்பொருட்டாயிற்று; "இறப்பி னிகழ்வினெதிர்வி னென்னுஞ் சிறப்புடை" (தொல், சொல், ௩௯௫) என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியரும் இவ்வாறுரைத்தார். பகுதி - நட்புப்பகை நொதுமல். இதனை வடநூலார் மித்துரு சத்துரு உதாசீனமென்பர்.

௧௧௩. "நன்றேதரினும்.........ஒழிவிடல்."

நு - லை:—இகத்தலால் என்பது இகந்தெனத் திரிந்துநின்றது என்றார். அது "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின" என்னுஞ் சூத்திரவிதி வழுவாமற்பாதுகாத்து, சொற்றிரிதலன்றிப் பொருள் திரியா எனத்துணிந்து "வினையெஞ்சு கிளவியும் வேறு பல்குறிய" (தொல், சொல், ௪௫௩) என்பதனான், இகத்தலாலெனக் காரணப் பொருட்டாய் நின்ற இகப்பவென்னும் எச்சம் செய்யுணின்றபடியே திரிந்துநின்றதென உரைப்பது, இவ்வுரையாசிரியர்க்கும் இளம்பூரணர்க்குங் கருத்து. இகத்தலான் என்னும் பொருட்டாய் இகப்ப என்பது இகந்து எனத்திரிந்து நின்றதென்பதனை, இகத்தலான்

என்னுமெச்சம் இகந்து எனத்திரிந்துநின்றதென வாசகம் விரியாமற் றெருக்கு எழுதினரெனக. அது, செய்தலால் என்னும் வாய்பாடு பெறுமோர் எச்சமின்மையும், "கலந்துணர்த்துங் காதலர்க் கண்டால்" (திருக்-௧௨௪௬)* "பண்புடையார்ப் பட்டுண்டுலகம்." (ஷை-௯௯௬)† என்பவற்றுள் இவ்வாறு விரித்தெழுதியதுங் காண்க. இனி, "நாமங்கெடக் கெடுநோய்" (௩௬0) என்பதனுள் "கெடலால் என்பது கெட எனத் திரிந்துநின்ற" தென்பது பிழை, கெடவென்பது தானே அப்பொருட்டாதலினென்க.‡ இன்னும் செயவெனச்சம் காரணப்பொருட்டாதல், "தாமின்புறுவதுலகின்பு" "கண்ணுள்ளார் காதலவராக" (௧௧௨௭) "நெஞ்சத்தார் காதலவராக" (௧௧௨௮) "மற்றியான் ....உள்ளவுளேன்" (௧௨0௬) என்பன முதலியவற்றுள்ளும் பிறர் செய்யுட்கண்ணும் பெரும்பான்மையும் வருதல் காண்க. இனி, செய்தெனெச்சம் பிறவினைகொள்ளவும், செய்யுட்கணின்றபடியே திரிந்துநின்றதென்னும் [illegible] சமாக மாறித் திரிந்துநிற்பதெனவும வரும். அவை.—"குடிமடிந்து குற்றம் பெருகும்" (௬0௪) "அறனீனு மின்பமு மீனும் திறனறிந்து தீதின்றி வந்தபொருள்" (௭௫௪) "இன்மையென வொருபாவி மறுமையு மிம்மையு மின்றிவரும்" (௧0௪௨) என்பனவற்றுட் காண்க. திருக்கோவையாரில், "தேன்றிக்கிலங்கு" என்பதுமது (௩௨௫). இன்றியென்னும் விரவுவினையெச்சம் இலனாகவெனத் திரிந்துநின்றதென்பதற்கு, விரவுவினை யுயர்திணையாண்பாலொருமையாகத் திரிதலால் இவ்வுரையாசிரியர் இவ்வாறுரைத்தாரென்பாருமுளர். "இலங்கிழாய்" (௧௨௯௨) என்னும் பாட்டுள், நீப்பவெனத் திரிந்ததென்பதனை, நீப்பவென்பது திரிந்ததென வெழுதுக. இனி, "அம்முக்கிளவி" என்னும் சூத்திரத்துள் (தொல், சொல், ௨௨..) நலிந்து பொருள்கொண்டு, செய்தெனெச்சம் பிறவினைகொள்ளும் என்று

---

* "கெடவென்பது எச்சத்திரிவு" என்பது பரி......ருரை; இஃது இடைச்செருகல் என்பது இந்நூலுடையார் கருத்து.

† "கலத்தலாலென்னும் பொருட்டாய்க் கலக்கவென்பது திரிந்துநின்றது.

‡ இதனல், "படுத்தலான் என்னும்பொருட்டாய்ப் படவென்பது திரிந்துநின்ற" தென்பது உரைபாடமாதல் வேண்டும்.

மைப்பர் நச்சினார்க்கினியர். செய்யுட்கணின்ற எச்சங்களைப் பொருள் படுமாறு நின்ற எச்சமாக மாற்றித் திரிப்பது பேராசிரியர்க்கு மொக்கும். முற்றாக எச்சமாக செய்யுட்கணின்றவாறு திரிதற்கு "இன்றியென்னும் வினையெஞ்சிறுதி, நின்ற விகர முகர மாதல் தொன்றியன் மருங்கிற் செய்யுளுள்ளே" (தொல், எழுத், உ௩௭) என்னுஞ் சூத்திரவிதியானும் கொள்க. இனி, நச்சினார்க்கினியர் எச்சமுற்றாய்த் திரிதற்கு இச்சூத்திரத்தைக் காட்டினாரென்க.

௧௧௬. "கெடுவல்யானென்......நல்லசெயின்"

ந - லை:—அல் ஈற்றுத்தனித்தன்மை வந்தது. "குடிசெய்வல்"(௧0௨௩)என்பது மது. இனி, "இலனென்று தீயவை செய்யற்க" (திருக்-௨0௫) என்று அன் விகுதி தனித்தன்மையினும், "இலனு குமற்றும் பெயர்த்து" எனப் படர்க்கையொருமையினும் வந்தது.

௧௧௭. "கெடுவாக வையாது........டங்கியான் தாழ்வு."

ந - லை:—கெடு - முதனிலைத்தொழிற்பெயர். "அறிகொன்று" (௬௩௮) "ஒளிமாழ்குஞ் செய்வினை" (௬௫௩) "அணியெவனோ" (௧0௮௬) எனப் பெரும்பான்மையும் வரும்.

௧௧௮. "சமன்செய்து........சான்றோர்க்கணி.

ந - லை:—உவமையடை பொருளினும், பொருளடை உவமையினும் வந்தது. "இனியவுளவாக" (௧00) என்பது ஒருவழி வந்தது.

௧௩-ம் அதி· அடக்கமுடைமை.

---

௧௨௧. "அடக்கமமரரு........ளுய்த்துவிடும்."

ந - லை:—முன்னது உய்க்குமென்றும், பின்னது உய்த்து விடுமென்றும் நின்றமையால் ஒருசொல். "வேண்டியிருப்பர்" (௮0௪) "நீக்கி நிறுத்து" (௧௧௩௨) என்பனவும் அப்பொருள. "தவ்வையைக்காட்டி விடும்" (௧௬௭) என்பது இருசொல். "இன்னாசெய்தாரை" என்பதனுள் (௩௧௪) 'செய்து விட' லும் அது.

கஉச. "நிலையிற்றிரியா.........மாணப்பெரிது."

நு - லை:—தோற்றம் - உயர்ச்சி. மலையின்கண்ணதனைக் கூட்டியெழுதியதால் ஆகுபெயரென்றார். "நுண்மாணுழைபுலமில்லானெழினலம்" (சOஎ) முதலிய ஆகுபெயர் பெரும்பாலும் வருதல் காண்க.

கஉஎ. "யாகாவாராயினும்.........சொல்லிழுக்குப்பட்டு."

நு - லை:—யாவும் என்பதற்கு எல்லாவற்றையும் என்றுரைத்து, யாவென்பது அஃறிணைப்பன்மை வினாப்பெயர் எண்ணடுஞ்சாமையுணர்த்தி நின்றதென்றார். முற்றும்மை விகாரத்தொகையென்றார் செய்யுட்டொடை காரணமாக. இதுவும் அச்சூத்திரவிதியன்மை குறித்தென்க. மேல்வரும் விகாரமெல்லாம், இன்னொலி, செய்யுட்டொடை அடிப்பாடு இவை மூன்றினுள் அமையுமிடமறிந்து அமைத்துக்கொள்க. சோகாப்பர் என்பதொருசொல். அல்லாப்பர் செம்மாப்பர் என எடுத்துக்காட்டியது சொற்சோதனை.

கஉகூ. "தீயினாற் சுட்டபுண்.........சுட்டவடு"

நு - லை:—குறிப்பு வேற்றுமையலங்காரம். உருவகம் (௬Oச, உகூ, கOகூஅ) வேற்றுமை (கஉகூ) ஒட்டு (சஎரு) பின்வருநிலை (உOO ௬உO) முதலிய அலங்காரங்களும், "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்னுஞ் சூத்திரமும் பின் முன்னாகத் தொக்க தொகையும் (௬ககூ) எழுதியதால், இவ்வுரையாசிரியர்க்குத் தொல்காப்பியமல்லாத நூல்களும் அங்கீகாரமென்க. ஒரு பொருட் பன்மொழி என்னுஞ் சூத்திரம் அவிநயமாதல், அகத்தியமாதல் வேண்டும் என்க.

கச-ம் அதி. ஒழுக்கமுடைமை.

கருகூ. "ஒழுக்கமுடையவர்க்.........வாயாற்சொலல்"

நு - லை:—வேண்டா கூறிவேண்டியது முடித்தல். வடநூலார் தாற்பரியமென்பர். "தேறுக தேறும் பொருள்" (ருOக) என்பதன்கண் தாற்பரியத்தாலென்றுரைத்ததும் இது நோக்கி.

கரு-ம் அதி. பிறனில்விழையாமை.

கசச. எனைத்துணைய.........பிறனில்புகல்,

ந - ஸே:— "என்னீரறியாதீர்" போலத் தேரான் என்பது முற்றெச்சமாய் ஒருமை பன்மை மயங்கியது. ஐயுருதபிறன் என்ற பக்ஷாந்தரத்து ஒருமைப்பன்மை மயங்காமை காண்க. தேராணுகிய என இருபெயரொட்டாக்காது தேராத என நேரே பெயரெச்சமாக்கியது காண்க; "அகத்தின்னு வஞ்சரை யஞ்சப்படும்." (அஉச) என்பதும் அது.

கசகூ. நலக்குரியார்.........டோயாதார்.

ந - ஸே:—நாமநீர் - அச்சந்தருங்கடல். தொல்காப்பியனுர் பேம் நாம் உரும் (தொல்-சொல்-ககஉ) என்று ஒற்றீறு யோதினமையால் நாம் எனத் திரிந்ததென்றுர் என்க. நாமவேல் என்பதுமது. நலத்திற்கு என்பது நலக்கென அத்தும் இன்னும் சாரியை குறைந்தது. "நிலக்குப்பொறை" (ருஎ0) "வையக்கணி" (எ0க) "மனக்கினிய" (நான்மணி) என்பனவுமது.

ககா-ம் அதி. அழுக்காறுமை.

ககா. அறனுக்கம்.........தழுக்கறுப்பான்.

ந - ஸே:—அழுக்கறுப்பான் - அழுக்காற்றைச் செய்வான். அழுக்கறுப்பான் பண்படியாகப் பிறந்தவினை.

ககா. கொடுப்பதழுக்கறுப்பான்.........கெடும்.

ந - ஸே:—சுற்றங்கெடுமெனவே, அவன் கேடு சொல்லாமலே முடிந்தது. "மீக்கூறுமன்னனிலம்" (கூஅகா) என்பதும் அது.* "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" (தொல்-சொல்-கா0) என்னுஞ் சூத்திரத்துள், இளம்பூரணர், "குடங்கொண்டான் வீழ்ந்

---

* "நிலத்தை மீக்கூறுமெனவே, மன்னனைமீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று" என்பது பரி.....ருரை.

தாற் குடம் வீழ்ந்ததென்பது சொல்லாமலே முடிந்த" தென்றுரென்க.

௧௬அ. "அழுக்காறெனெ.........யுய்த்துவிடும்."

ந - லை:—பண்புக்குப் பண்பியில்லையேனும் தன்னையாக்கினானைக்கெடுத்தல்பற்றிப் பாவமென்னுது,பாவியென்றார்; இதனாலும் அழுக்கற்று என்பது பண்படியாகப் பிறந்த வினையென்பதறிக.

(தொடரும்.)

பெரும்பொருள் விளக்கப்பாடல்கள்.

:o:

[இப்பெயர்பெற்ற நூலொன்று, புறத்திரட்டு என்னும் தொகை நூலில் எடுத்தாளப்படுகின்றது. இத்திரட்டில் எடுத்துக்கோக்கப்பெற்ற பாடல்கள் நாற்பதென்று ஒருவாறு கணக்கிடப்பட்டது. இப்பெரும்பொருள் விளக்கம் இப்போது அகப்பட்டிலதாயினும், இதன்பாடல்களால், அநேக தர்மவிஷயங்களை இந்நூல் கூறுவதென்பதும் பழைய சான்றோரால் இயற்றப்பெற்ற உயர்வுடையதென்பதும் விளங்குகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியலில், ஆசிரியர் நச்சினார்க்கினியர் புறப்பொருட்டுறைகள் பலவற்றுக்கு இந்நூற்பாடல்களை மிகுதியும் உதகரிக்கின்றனர். அவற்றில், புறத்திரட்டாற் பெரும்பொருள்விளக்கம் என்று தெளிவாகத்தெரிந்தவைகளே இப்போது பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே, புறத்திரட்டில், வளையாபதி, ஆசிரியமாலை, சாந்திபுராணம், தகடூர் யாத்திரை, நாரத சரிதை, இரும்பல் காஞ்சி முதலிய நூல்களினின்று பல அழகிய பாடல்களும் கோக்கப்பட்டிருக்கின்றன. முன்பு, வளையாபதி ஆசிரியமாலைப்பாடல்களைச் செந்தமிழ் மூலம் ஆராய்ந்து வெளியிட்டதுபோலவே, இப்போது பெரும்பொருள் விளக்கப்பாடல்களையும், நூலினுள்ளவாறு இயன்றவரை ஆராய்ந்து வெளியிடுகின்றமையால், இம்முயற்சியில் நேருங்குற்றங்குறைகளை அறிஞர் பொறுப்பார்களாக:—பத்திராசிரியர்.]

(௧) மின்னுந் தமனியமும்.வெற்றிரும்பு மோரினமாய்ப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே—கொன்னே
யொளிப்பாரு மக்களா யொல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு. (ஈகை)

(௨) இளையர் முதிய ரெனவிருபால் பற்றி
விளையு மறிவென்ன வேண்டா—இளையனுய்த்
தன்றாதை காம நுகர்தற்குத் தன்காம
மொன்றாது நீத்தா னுளன். (அறிவுடைமை.)

(௩) ஈட்டிய தெல்லா மிதன்பொருட் டென்பது
காட்டிய கைவண்மை காட்டினார்—வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து. (குடிமரபு.)

(௪) யானை நிரையுடைய ரேனு மெழில்சிறந்தா
ரேனை நிரையுடை யோர்வாழ்நர்—யானைப்
படையோர்க்கு நன்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு. (ஷை)

(௫) வந்த நிரையி னிருப்பு மணியுட
னெந்தலை நின்றலை யான்றருவன்—முந்துநீ
மற்றவை பெற்று வயவேந்தன் கோலோங்கக்
கொற்றவை கொற்றங் கொடு. (நிரை கோடல்.)

(௬) பிறர்புல மென்னார் தமர்புல மென்னார்
விறல்வெய்யோர் வீங்கிருட்கட் சென்றார்—நிறையுங்
கடாஅஞ் செருக்குங் கடுங்களி யானை
படாஅ முகம்படுத் தாங்கு. (ஷை)

(௭) வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றா—ரெவ்வாயு
மார்க்குங் கழலொலி யங்கட் படாலியரோ
போர்க்குந் துடியோடு புக்கு. (ஷை)

(௮) வாள்வலம் பெற்ற வயவேந்தனேவலாற்
றாள்வல் லிளையவர் தாஞ்செல்லி—னாளைக்
கனைகுர னல்லாவின் கன்றுள்ளப் பாலின்
னனைவது போலுமிவ் வூர். (ஷை)

(௯) திரைகவுள் வெள்வாய் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோ னேற்றுரைத்த நற்சொ—னிரையன்றி
யெல்லைநீர் வைய மிறையோற் களிக்குமால்
வல்லையே சென்மின் வழி. (ஷை)

(௧௦) காட்டகஞ் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரையான்
மீட்ட மகனை வினவுறா—ளோட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழு
மென்னதுயர் பட்டாயோ வென்று. (ஷை)

(௧௧) கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
யெங்கு மறவ ரிரைத்தெழுந்தார்—தங்கிளைகண்
மன்றுகாண் வேட்கை மடிசுரப்பத் தோன்றுவ
கன்றுகாண் மெய்குளிர்வீர் கண்டு. (ஷை)

(௧௨) யாமே பகுத்திட வேண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொ—லேமுற
வன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சேர்ந்து. (நிரை மீட்சி.)

(௧௩) அடியதி ரார்ப்பின ராபெயர்த்தற் கன்றாய்
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வலம். (ஷை)

(௧௪) கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர் கருதாதா ருள்ளந்
துரந்து நிரைமீட்ட தோள். (ஷை)

(கரு) கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பினன்
மெல்ல நடவா விரையு நிரையென்றே
தெள்ளறற் கான்யாற்றுத் தீநீர் பருகவு
மள்ளர் நடவா வகை. (ஷை.)

(கசு) விண்ணசைஇச் செல்கின்ற வேலிளைய ரார்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்த—னெண்ண
மொருபாற் படாதார்க்கண் டொன்னார்தம் முள்ள
மிருபாற் படுவ தெவன். (பகைவயிற் சேறல்.)

(கஎ) போர்ப்படை யார்ப்பப் பொடியா வெழுமரோ
பார்ப்புற மெண்ணான்கொல் பார்வேந்த—னூர்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிப்ப நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது. (ஷை)

(கஅ) மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை
மாதர்பாற் பெற்ற வலியளவோ—கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலா
னைங்கணை தோற்ற வழிவு. (பாசறை.)

(கசூ) மாற்றுப் புலந்தொறும்போர் மண்டிய மாக்களங்கொள்
வேற்றுப் புலவேந்து வேல்வேந்தர்க்—கேற்ற
படையொலியிற் பாளொலி பல்கின்று லொன்றொ
ருடையண தாம்பெற் றுவந்து. (ஷை)

(உ௦) தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண். (ஷை)

(உக) பகலெரிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
யிகலரணத் துள்ளவ ரெல்லா—மகலிய
விண்டஞ்ச மென்ன விரிந்தகுடை நாட்கொள்ளக்
கண்டஞ்சிச் சும்புளித்தார் * கண். (எயில் கோடல்.)

*சும்புளித்தல்-கண்கூசுதல்; "சுமந்தநாகமுங்கண்சும்புளித்தவே" என்பது இராமாவதாரம். (மிதிலை. கஙஉ.) இது, சிம்புளித்தல் எனவும் வழங்கும்; "சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து" என, சுந்தரமூர்த்திநாயனார் அருளிய திருக்கருப்பறியலூர்ப் பதிகத்து வருதலானுணர்க.

(௨௨) தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
யழுது விழாக்கொள்வ ரன்றோ—முழுதளிப்போன்
வாணாட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணாட்கோ ளென்று நினைத்து. (எயில்கோடல்)

(௨௩) இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றேரான் போனகங் கைக்கொள்ளானா—லெற்றுங்கொ
லாறாத வெம்பசித் தீயா லுயிர்பருகி
மாறா மறலி வயிறு. (எயில் கோடல்.)

(௨௪) தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதா ரூர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு. (எயில் கோடல்)

(௨௫) வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பியக்கா
லஞ்சி யொதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்
வான்றோய் புரிசை பொறியு மடங்கினவா
லான்றோ ரடக்கம்போ லாங்கு. (எயில் கோடல்)

(௨௬) பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ ருடன்றெழுந்தா ராகி—யிருவரு
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும். (எயில் கோடல்)

(௨௭) குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப—வென்றார்
விளங்குருவப் பல்குடை விண்மீன்போற் றோன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து. (எயில்காத்தல்)

(௨௮) முற்றரண மென்னு முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவா ணாட்கொண்டான்—புற்றிழிந்த
நாகக் குழாம்போ னடுங்கின வென்னாங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து. (ஷை)

(உகூ) பொருசின மாருப் புலிப்போத் துறையு
மருவலை கண்டார்போ லஞ்சி—யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றேர்வேந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து. (ஷை)

(௩0) வழுவான் மிளைபோய் மதிலா னகழ்தூர்ந்
தெழுவா ... ளொன் றுண்ட தெல்லா—மிழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சீற்றத்தீ
விட்டெரிய விட்ட வகை. (ஷை)

(௩க) தாக்கற்குப் பேருந் தகர்போன் மதிலகத்
தூக்க முடையோ ரொடுங்கியுங்—கார்க்க
ணிடிபுறப் பட்டாங் கெதிரேற்ருர் மாற்ரு
ரடிபிறக் கிடு மரிது. (ஷை)

(௩உ) வான் றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ ரென்பதற்குச்
சான் றுரைப்ப போன் றன தங்குறை—மான்றேர்மேல்
வேந்து தலைபணிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன றேன்மேற் பல. (அமர்.)

(௩௩) இடியா னிடிமுகிலு மேறாண் ணு மென் னும்
படியாற் பகடொன் று பீட்டு—வடிவே
லெறிந்தார்த்தார் மள்ள ரிமையாத கண்கண்
டறிந்தார்த்தார் வானோரு மாங்கு. (அமர்)

(௩ச) ஆளுங் குரிசி லுவகைக் களவென்றாங்
கேளின் றிக் கொன்ருரே கேளாகி—வாள்வீசி
யாடினு ரார்த்தா ரடிதோய்ந்து மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து. (ஷை)

(௩ரு) வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையலச்
செய்யோ ஞெளிவழங்குஞ் செம்மற்றே —கையகன் று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
றூர்தாங்கி நின் ற தகை. (தானை மறம்)

(௩௬) மம்மர் விசும்பின் மதியு மதிப்பகையுந்
தம்மிற் றடுமாற்றம் போன்றதே—வெம்முனையிற்
போர்யானை மன்னர் புறங்கவித்த வெண்குடையைக்
கார்யானை யன்றடர்த்த வை (யானைமறம்)

(௩௭) வான்றோய் கழுகினமும் வள்ளுகிர்ப் பேய்க்கணமு
மூன்றோய் நரியு முடன்றுக்க—மூன் றங்
கடமா நிலநனைக்குங் கார்யானைக் கிட்ட
படமாறு நீப்பதனைப் பார்த்து. (ஷை)

(௩௮) மாயத்தாற் றுக்கு மலையு மலையும்போற்
காயத்தா றஞ்சாக் களிற்றொடுபோய்ச்—சாயுந்
தொலைவறியா வாடவருந் தோன்றினர் வான்மேல்
மலையுறையுந் தெய்வம்போல் வந்து. (ஷை)

(௩௯) வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ் கொற்றவை—நின்றளிப்ப
வுண்டாடு பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து. (களம்)

(௪0) கண்ணுதலோன் காப்பக் கடிநேமி யோன்காப்பக்
எண்ணிருதோ ளேந்திழையா டான்காப்பப்—பண்ணிய நூற்
சென்னியர்க் களிக்குஞ் செல்வனீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே. (வாழ்த்து)

———

உ

கடைச்சங்க ஆராய்ச்சி.

——.0:——

ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்கள், "செந்தமிழ்" ஆவணிப்பகுதியில் எழுதிய "பாண்டியர்களும் தமிழ்ப்புலவர்களும்" என்ற விஷயத்தைக் கூர்ந்துபடித்ததில், அநேக அரிய விஷயங்கள் தெரியவந்து மகிழ்ச்சி விளைத்ததோடு, பலபெருத்த ஐயங்களும் உண்டாகின்றன. அவற்று

க்கு அவர்களாவது, பிறராவது ஏற்ற சமாதானம் கூறுவார்களென்று கருதி, அடியில் வரும் வினாக்களை இடலாயினேன்.

(1) ஷை பகுதி, 440-வது பக்கத்தில், "இறையனார் அகப்பொருட்பாயிரத்தில், கடைச்சங்கத்தைப் பரிபாலித்த அரசர்களிற் கடைசியானவன் கடுங்கோன் என்று கூறியிருக்கிறது" என்றுஎழுதி, இதற்குமேல் ராயரவர்கள் தம்விஷயத்தைத் தொடுத்திருக்கின்றனர். ஆனால், அவ்வகப்பொருளுரையிலோ, தலைச்சங்க விஷயங் கூறுமிடத்து, "தலைச்சங்கமிரீஇயினார்—காய்சினவழுதி முதல் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப" என்று வருகிறதேயன்றி, கடைச்சங்கவரலாற்றிலே கடுங்கோனைக் காணோம். கடைச்சங்கமிருந்தார், முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்றே அதிற் கூறப்பட்டுளது. இதன் காரணம் என்னை.?

(2) ராயரவர்கள் காட்டிய பாண்டிய வமிசாவளியில், முதுகுடுமிப் பெருவழுதியும், அவனை யடுத்துவரும் களப்பிர அரசனும், அவனையடுத்தகடுங்கோனும், தொடர்ச்சியாகவே மூன்று தலைமுறைக்காலம் பாண்டிநாட்டையாண்டு வந்தவர்கள் என்பதற்கு ஆதாரமுண்டா? அவர்கள் காட்டிய வமிசாவளியினின்று அப்படி விளங்கவில்லை. விளங்காததால், அவ்விடைப்பட்ட காலம் நான்கைந்து நூற்றாண்டுகள்வரை சென்றிருக்கக் கூடாதென்பதற்குத் தக்க நியாயமென்ன?

(3) நெடுஞ்சடையனிடத்து, கிராமவிஷயமாக முறையிட்ட கோயிலிற்பாடுவான் கூற்றாக, ராயரவர்கள் எழுதியவற்றில், "முன்னாள் இன்னாரால் இன்னகிராமம் என்முன்னோர்க்குக் கொடுக்கப்பட்டது: அதனை மீட்டுத்தருக" என்னும் விஷயம் வருகின்றது. இவ்வாறே இக்காலத்தும், பாண்டிநாட்டில் வேம்பத்தூர், பெருங்கருணைமுதலிய எண்ணிறந்த கிராமங்கள், குலசேகரபாண்டியன், பராக்ரமபாண்டியன் முதலியோரால் பிராமணர்க்குத் தானமளிக்கப் பெற்றவையுள்ளன. அவற்றின் தாமிரசாஸனங்களிற் சிலவும் அங்கங்கே யுண்டு. அவை எத்தனையோ நூற்றாண்டுகளாகியும் வழிவழியே ஆதாரமாய் வருகின்றன. அது போலவே, தன் முன்னோ

ரிழந்த வேள்விகுடியைத் தன் பூர்வசாஸனத்தைக் காட்டி அக்கோயிலிற்பாடுவான் பாண்டியனிடம் பெற்றிருத்தல் கூடுமன்றோ? அக்காலத்தில்,பழைய தாமிரசாஸனங்களைக் கொண்டே நியாயஞ்செய்து வந்த முறைமைப்படி, நெடுஞ்சடையனும், தனக்குப் பலநூற்றாண்டுக்கு முன்பு கொடுக்கப்பட்ட தானசாஸனத்தைக் கொண்டு நியாயஞ்செய்தானாதல் வேண்டுமென்பது திண்ணம். ஆதலால், ராயரவர்கள், தொடர்ந்த தலைமுறையினனாக முதுகுடுமியைக் கொண்டு, அவன் கி. பி. 6—ஆம் நூற்றாண்டினனென்று காலத்தைச்சுருக்கிக் கூறியது என்னஉறுதிகொண்டோ? விளங்கவில்லை.

(4) ராயரவர்கள், கடைச்சங்கத்தவரை யெல்லாம் 7-ஆம் நூற்றாண்டினராகத் தக்க ஆதாரமேவுமின்றியே முடித்துவிட்டதோடு, நக்கீரனார் காலத்தை முன்னமே அளந்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். இறையனார்களவியலில் அந்நூல் இன்னாருக்கு இன்னாராற் கூறப்பட்டது எனச் சிலதலைமுறைகள் குறிக்கப்படுதல்கொண்டு கணித்ததே அக்காலவரையறை. அக்களவியலுரை எழுதியவர் கி. பி. 8-ஆம் நூற்றாண்டினராதல் வேண்டுமென்று, செந்தமிழ்ப் பத்திராசிரியர் "இளம்பூரணவடிகள்" என்ற வியாசத்தில் பலதக்ககாரணங்களோடு குறிப்பிட்டிருக்கிறார். அக்கொள்கை ராயரவர்கள் கொள்கையோடு முரணுதென்றும் தோற்றுகிறது. அஃது உண்மையாயின், 8-ஆம் நூற்றாண்டில் நூலெழுதினவர், 7-ஆம் நூற்றாண்டிலிருந்த நக்கீரனாரைப்பற்றித் தெளிவான விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டுமன்றோ. அவ்வாறன்றி ஷை களவியற் பாயிரத்தில், கடைச்சங்க வரலாற்றைப்பற்றி எழுதும்போது, "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப" என்றும், அச்சங்கத்தாரில் நக்கீரரொருவரென்றும் இத்தகைய கர்ணபரம்பரைகளை யெழுதுவது ராயரவர்கட்கு உடம்பாடா? சாஸனங்களையன்றி, வேறெவ்விதக்கருவிகளும் நம்பத்தக்கனவல்லவென்று கருதும் ராயரவர்கள் இப்போது ஷை களவியலில் வரும் தலைமுறைகளைத் தங்கொள்கைக்குப் பிரமாணமாகக்கூறுதல் பொருந்துமா.?

(5) கடைச்சங்ககாலம் 8-ஆம் நூற்றாண்டென்றே ராயரவர்கள் சம்மதப்படி வைத்துக்கொள்ளினும், ஆரியப்படை தந்த நெடு

ஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கூடாரத்துத்துஞ்சிய மாறன்வழுதிமுதலாக, சங்கநூல்களிற்பாண்டியவரசர்களென்று தெளிவாகத்தெரிந்தவர்கள் அந்த 8-ம் நூற்றுண்டில் ஆண்டவர் என்பதற்கு ஆதாரமுண்டா? வேள்விகுடிச்சாஸனத்துக் கண்ட வமிசவிருக்ஷம் கடுங்கோன்முதல் இடையீடில்லாமல்தொடர்ந்துவந்த அரசர்களைக் குறித்துவிட்டமையால், சங்கநூல்களிற்கண்ட எண்ணிறந்தபாண்டியர்கள் அக்கடுங்கோனுக்குப் பிந்தியவிடத்தில் நுழைந்துகொள்ள இடமில்லை. இல்லையாகவே, அக்கடுங்கோனுக்கு முந்தியதலைமுறையிலேயே நுழைந்துகொள்ளுதல்வேண்டும். அந்த ஸ்தானம், களப்பிர அரசர்க்கும் முதுகுடுமிக்கும் மத்தியிலுள்ள தலைமுறைகளாகாவோ? வேறு இடத்தில் அவர்களை நுழைப்பதற்குத் தக்க ஆதாரமிருந்தால் ராயரவர்கள் காட்டலாம்.

(6) திருநாவுக்கரசுநாயனர் 6-ம் நூற்றுண்டின் கடைப்பகுதியிலிருந்தவரென்பது ராயரவர்கள் போன்ற சரித்திரவாராய்ச்சியாளர்க்கெல்லாம் ஒத்த துணிபன்றே? ஆயின், அந்நாயனர் திருப்புத்தூர் திருப்பதிகத்தில், "நன் பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கருளினேன் காண்" என்று, நக்கீரனர் வரலாற்றில் வரும் பழைய விஷயத்தைக் கூறுதல், அந்நக்கீரனர் 7-ம் நூற்றுண்டினரென்னும் ராயரவர்கள் புதியகொள்கைக்குப் பெரிதும் மாறுபடாதோ? அப்பர்சுவாமிகள், தருமிக்குஇறைவன் பொற்கிழியளித்தருளிய திருவிளையாடலைக்குறிப்பராயின், அச்சுவாமிகளுக்குச்சில நூற்றுண்டுகட்கு முன்பு நக்கீரனர் விளங்கினரென்பதை அது காட்டாதா? இவ்வாறே, ஷை ஸ்வாமிகள், கோச்செங்கணனைப் பற்றி, அவன் முன் ஜன்மத்திற் சிலந்தியாயிருந்த பழஞ்செய்தியையும் தம் திருப்பதிகங்களிற் கூறுவர்.

ராயரவர்கள் கூறியவற்றின்மேல் எழுந்த சில ஐயங்களையே இங்கு எழுதலாயினேன். கடைச்சங்ககாலத்தைப்பற்றி, இதுகாறும் கூறப்பட்டுள்ள பற்பலகாரணங்களின்வலிமையைப்பற்றி எழுதுவதானல், ராயரவர்கள், அவை சிலாசாஸனத்தைக்கொண்டு நாட்டப்படாமையால் பொருந்தாவென்று ஒருகால் மறுத்துவிடக்கூடும். சிலாசாஸனந்தவிர ஏனைய நூற்கருவிகளில் அவர்கட்குச் சிறிதும்

நம்பிக்கை கிடையாதென்று நன்றாகத்தெரிகிறது. ஏனெனில், தம் விஷயத்தில், கடைச்சங்ககாலத்தைப் பற்றி இதுவரைகொள்ளப்பட்டுவரும் நூற்பிரமாணங்களைக் குறித்துச் சிறிதும் அவர்கள் கவலை வைக்காதிருத்தல் காணலாம். ஆதலால்,நானும் அந்தப்பழைய பிரஸ்தாபங்களை இழுத்தல்,ராயரவர்களுக்குமுன் பிரயோஜனப்படாது என்று ஒதுக்கலாயினேன். யான் கேட்கும் வினாக்கட்கு ராயரவர்கள் தக்கவிடை மொழிந்தால், பலர்க்குள்ள ஐயத்தை நீக்கப் பேருபகாரமாகுமென்பது சொல்லவேண்டாம்.

P. G.

ஆலஞ்சேரி அயிந்தன்.*

———:o:———

இறையனார் அகப்பொருட் பாயிரத்திலே அவ்வகப்பொருள் வரலாறு உரைக்கின்றவிடத்து, "அக்காலத்துப் பாண்டிநாடு பன்னீராண்டு வற்கடஞ் சென்றது" என்று தொடங்கி, அவ்வற்கடகாலத்தே இறைவனருளிய அகப்பொருட்சூத்திரம் அறுபதும் கிடைத்ததும் நக்கீரனாரால் அவற்றுக்குப் பொருள் காணப்பட்டதும் பிறவும் கூறப்பட்டிருத்தல் பலரு மறிவர். இப்பன்னிரண்டுவருஷப்பஞ்சத்துக் காற்றாது, சங்கப்புலவர் பலர் வேற்றுநாடுகட்குச் சென்று பிழைக்கப்போயினர். இவ்வற்கடத்தையே சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையில், "பன்னீராண்டு பாண்டிநன்னாடு, மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது" என்று (காதை-௧௪; அடி. ௫௫, ௫௬) கூறினர்போலும். இவ்வாறு பிழைக்கவேண்டி, வேற்றுநாடுசென்ற புலவர்கள் ஆலஞ்சேரி அயிந்தன் என்னும் வேளிர்தலைவனை யடைந்து, அவன் பெரிதும் ஆதரிக்க வாழ்ந்துவந்தனர். அப்போது, பாண்டியன், தன்னாடுநீங்கிய புலவர்களது யோகக்ஷேமங்களை உசாவி அவர்கட்குத் திருமுகமனுப்ப, புலவர்கள் வற்கடக்கொடுமையும் தாம் ஆலஞ்சேரியிலுள்ள வள்ளலால் அவ்வற்கடத்துன்பமறியாது வாழ்ந்துவருதலை

* இவனை, மயிந்தன் என்றும் கூறுவர்.

யும், அவ்வள்ளலுடைய பெருமையையும் பற்றிப் பாண்டியற்கு அடியில் வரும் "காலை ஞாயிறு" என்னும் அழகிய அகவலை எழுதி விடுத்தனர். இவ் வயிந்தனைப் பற்றி, "ஆலஞ்சேரி யயிந்த, னூருண் கேணி நீரொப்போன்' எனவும் சான்றோர் செய்யுட் செய்தார்" எனப்பொருளதிகார அகத்திணையியலுரையில் (௫௦) நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருத்தலுங் காண்க. இப்பாடல் தமிழ் நாவலர்சரிதையினும் தனிப்பாடற்றிரட்டின் பதிப்பொன்றிலுங் கண்டதாயினும், அருகிக்காணப்படுதலாற் பலரும் அறிதல்வேண்டிச் செந்தமிழில் வெளியிடலாயிற்று. அது வருமாறு:—

"காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறி
விழித்தவிழி யெல்லாம் வேற்றுவிழி யாகித்
தந்தையை மக்கண் முகம்பா ராமே
வெந்த சாகம் வெவ்வே றருந்திக்
குணமுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமே
யறவுரை யன்றி மறவுரை பெருகி
யுறைமறந் தொழிந்த வூழிகா லத்திற்
றுயில் லவர்க்குத் தாயே யாகவுந்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரு நெடுமால் போல்வன்
ஆலஞ் சேரி யயிந்த னென்போன்
[ஊருண் கேணி நீரொப்போன்]
தன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
வருந்த வேண்டா வழுதி
யிருந்தனெ னிருந்தனெ னிடர்கெடுத் தனனே"

பத்திராசிரியர்.

---

[*] இவ்வடி, தொல்காப்பிய அகத்திணையியல் ௫௦-ஆம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் காட்டியுள்ளபடி, சேர்க்கப்பட்டது.

உ

நம்பியகப் பொருள்.

:o:

தமிழ்ப்பாஷைக்குரிய இலக்கண வகைகளுள்ளே நான்கு புருஷார்த்தங்களையும் நேரே பயப்பதாகிய பொருளிலக்கணமே மற்றையவைகளினும் விசேடமுடையதென்று பண்டைக்காலப் புலவரெல்லாம் பாராட்டிக்கூறுவர். அது இறையனாரகப் பொருளுரையானும் அறியப்படும். பொருளிலக்கணம் அகப்பொருள் புறப்பொருள் என இருவகைப்படும். அவற்றுள் அகப்பொருள் தொல்காப்பியம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளதேயாயினும் சுருக்கம் பற்றி இப்போது பலராலும் படிக்கப்பட்டு வருவது நம்பியகப் பொருளேயாம். இது தொல்காப்பியத்தின் வழித்தாக நாற்கவிராசநம்பி என்பவரால் இயற்றப்பட்டது. அது,

"தொல்காப் பியனரு ளொல்காப் பெரும்பொரு
ளகப்பொரு ளிலக்கண மகப்படத் தழீஇ
....
....
அகப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
....
உத்தமன் புளிங்குடி யுய்யவந் தானெனு
முத்தமி ழாசான் மைந்த னித்தலத்
திருபெருங் கலைக்கு மொருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே."

என்னும் அதன் பாயிரத்தாற் பெறப்படும். திட்ப நுட்பங்கள் செறிந்த இருநூற்றைம்பத்திரண்டு சூத்திரங்களால் அகப்பொருளிலக்கணத்தை நன்கு விளக்கிச் செல்கின்றது. பொய்யாமொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவையை இலக்கியமாகவுடையது.

இதற்கு உரைகளாக அச்சிடப்பட்டிருப்பன இரண்டு. ஒன்று பழையது. அதிலே இலக்கியமாகிய வாணன்கோவைச்செய்யுள்களோடு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், அகநானூறு, ஐங்குறுநூறு முதலிய நூற்செய்யுள்களும் காணப்படுகின்றன. உரையாசிரியர் யாவரென்று புலப்படவில்லை. மற்றைய புத்துரைசெய்தவர் யாழ்ப்பாணத்து வல்வை இயற்றமிழ்ப்போதகாசிரியர் வைத்தியலிங்கபிள்ளை. இது பெரும்பாலும் வாணன்கோவையையே உதாரணமாகவுடையது. இவ்வுரைகளிலே சில சூத்திரங்களின் உரைகளும் உதாரணங்களும் ஆசங்கைக்கிடனாய் அமைந்திருக்கின்றன. அவற்றுள்ளே சிலவற்றை ஈண்டுக் கூறுதும்.

க. "அவற்றுள்—கைக்கிளையென்ப தொருதலைக்காமம்" என்னுஞ் சூத்திரத்துக்கு உரைகாரர்—

"இ - ள். நிறுத்த முறையானே கைக்கிளைக்குரிய பொருளுணர்த்துதனுதலிற்று. அவற்றுள்—மேற்சொல்லப்பட்ட அகப்பொருள் விளக்கமாகிய ஏழனுள்; கைக்கிளையுடையது—கைக்கிளை என்பதனுடைய பொருள், ஒருதலைக்காமம்—ஒருதலைக்காமமாம் எ-று" எனப்பொருள் கூறினர். இச்சூத்திரம் கைக்கிளையின், தன்மையை உணர்த்த வந்ததா? அதன் பொருளை உணர்த்த வந்ததா? "கைக்கிளையுடையது" என்பதற்கு "கைக்கிளை என்பதனுடைய பொருள்" என்பது பொருளாகுமா? கைக்கிளையுடையது என்பதற்குச் சந்தியாது? கைக்கிளை என்பதன் பொருள் யாது? ஒருதலைக்காமம் என்பது பொருளாகுமா?

"ஐந்திணையுடையதன்புடைக்காமம்" "பெருந்திணை யென்பது பொருந்தாக்காமம்" என்னும் மற்றைய சூத்திரவுரைகளும் இவ்வாறு ஆசங்கைக்கிடனாயிருத்தலை நோக்கி அறிக.

உ. "மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் சாயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு கைவகைத் தாகும்."

என்னும் சூத்திரவுரையில் உரைகாரர் "மாலை- உச்சிக்குப் பின்னு மூதித்தன்படுவதற்கு முன்னுமுண்டாகிய காலம். யாமம்- இடையிரவு. ஏற்படுகாலை-ஆதித்தன் படுகிறபொழுது" எனக்கூறினர்.

எற்படுகாலை என்பதற்கு ஆதித்தன் படுகிறபொழுது என்பது பொருந்துமா? வைகறைக்கும் நண்பகலுக்கும் இடையிலுள்ள காலம் உதயகாலமாவதன்றிப் பின்பகலாகுமா? எற்படுகாலை என்பதற்குச் சூரியன் உதிக்குங் காலைப்போது என்பதே ஆசிரியர் கருத்தாகும். எல்—சூரியன். படுதல்—தோன்றுதல். படுதல் இப்பொருட்டாதலை "படுபறியலனே பல்கதிர்ச்செல்வன்" எனவரும் புறநானூற்றுச் செய்யுளானும் அறிக. ஐவகைப்பொருளும் முறையே கூறப்பட்டிருக்கும் பின்வருஞ் செய்யுளும் இதனை வலியுறுத்தும்.

கந்தபுராணம்.

காலை வெம்பகல் கதிரவன் குடதிசைக் கரக்கும்
மாலை யாமம்வை கறையெலாஞ் செந்தழல் வடிவாய்
வேலையும்பரு கியவெழும் வெம்மைபோய் விளிந்து
பாலை காண்கிலா வாரியின் பெருமையார் பகர்வார்.

காலை—உதயகாலம். "கதிரவன் குடதிசைக்கரக்கும் மாலை" எனப்படுதலால் "மாலை, உச்சிக்குப்பின்னு மாதித்தன் படுவதற்கு முன்னுமுண்டாகிய காலம்" எனக்கூறுதலும் பொருந்தாமை அறிக.

ரு. "ஒழிபெனப் படுவ தகப்பாட் டுறுப்பும்
வழுவு மமைதியுந் தழுவிய தாகும்"

என்னுஞ் சூத்திரத்துக்கு உரையாசிரியர் ஒருவர் "ஒழிபென்று சொல்லப்படுவது அகப்பாட்டிற்குரிய வுறுப்பு மகப்பாட்டிலக்கணத்தைத் தப்பிய வதனையும் அமைந்தநீதியினையும் பொருந்தியதாம்" எனக்கூறினர். இவ்வுரை பொருத்தமுடையதாகுமா? மற்றையவர் "வழுவுமமைதியும்" என்பதற்கு "வழுவாயினவற்றினமைதியையும்" என்றார். வழுவையும் அமைதியையும் என்பதன்றி இவ்வாறு கூறுதலும் பொருந்துமா?

சு. "முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய."

என்னுஞ் சூத்திரத்துக்கு உரையாசிரியர் ஒருவர் "முதல் கரு உரி என்னும் மூன்று கூற்றவாகிய பொருளும் தத்தமக்குரிய திணையோடு கூட்டி இலக்கண முறைமை பிறதிணையோடு கூட்டி யுடனிலக்கணமுறையை ஆராய்ந்து மயங்குதலுமுரியவாகும். எ - று." எனப்பொருள் கூறினர். இவ்வுரையாற் சூத்திரக் கருத்துச்சிறிதும் புலப்படவில்லை.

இவ்வாறு ஆசங்கைக்கிடனாய் அமைந்திருப்பன பல. அவற்றைச் சமயம் வாய்ப்புழிக் கூறுதும்.

இங்ஙனம்.

தென்கோவை. ச. கந்தையபிள்ளை.

நித்திரை.

:o:

("ஜநவிநோதினி.")

நித்திரையென்பது யாவர்க்கும் இயற்கையே; அது யாவரும் முழுவதுங் கவலையற்று ஓய்வாயிருக்கிற காலமென்பதும் அனேகர்க்குத்தெரியும். ஆயினும் நித்திரையென்பது இன்னபொருளென்றும் அஃது இன்னவிதமாய் உண்டாகிறதென்றும் முற்காலத்தில் ஒருவரும் விசாரித்தவரில்லை. நாற்பது வருஷத்துக்குமுன்னேயும், தேகதத்துவசாஸ்திரி ஒருவர் நித்திரையைப்பற்றித் தேகசம்பந்தமான காரணம் யாதொன்றும் சொல்லக்கூடவில்லையென்றே சொல்லிவிட்டுப்போயினர். அதன்பின்புதான் நித்திரைக்குத் தகுந்தகாரணங்களும் நியாயங்களும் இவையென்று கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைத் தெரிந்துகொள்வது யாவர்க்கும் மிக்க விநோதமாயும் உபயோகமாயுமிருக்குமெனக்கருதி அவற்றின்வரலாற்றை ஒருவாறு எழுதுகிறோம்.

உறங்குங்காலத்திலேயும் இருதயம், சுவாஸாசயம், இரைப்பை இவற்றின் செய்கைகள் ஓயாமல் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்

றன. ஆயின் விழித்துக்கொண்டிருக்கிறகாலத்திலே நடப்பதுபோல அவ்வளவு துரிதமாயில்லாமல் மிகவும் மெதுவாக இயங்குகின்றன. ஒரேஒருபெரிய அவயவமட்டும் அசைவற்றிருப்பதாகத் தெரியவருகின்றது; அதுதான் மூளை. சௌக்கியமாய் அமைதியாகத்தூங்குகிற காலத்தில், தூங்குகிறவன் கனவுமுதலியவை ஒன்றுமில்லாமல் முழுதும் மெய்மறந்திருக்கிறானென்றும், மூளை மிகவும் மந்தமாயிருக்கிறதென்றும் தெரியவருகின்றது. ஆயினும் உண்மை அப்படிப்பட்டதன்று: மூளைக்கும் சரீரத்தின் மற்றஉறுப்புக்களுக்கும் உள்ளவேற்றுமை சிறிதளவுமாத்திரமேயன்றி வேறுவிதமல்ல. மூளை தன்வேலையினின்றும் ஒருபோதும் முழுதும் ஒழிந்திருப்பதில்லை; உயிரோடிருக்கும்போது அப்படி ஒருபோதும் இராது. அவயவங்கள் அசைவதிலேதான் உயிர் பற்றியிருக்கின்றது. தேகத்தின் பெரியஉறுப்புக்களுள் ஏதாவதொன்று அடியோடு அடங்கிப்போயிற்றென்றால், அப்போது எல்லா உறுப்புக்களும் அடங்கிப்போனதுதான்; அதாவது சரீரமே ஒழிந்துபோனதுதான். மூளைமிகவும் மந்தமாயும், சிறிதும் ஸ்மரணையற்றும் இருப்பதாகத் தோன்றினாலும், முயற்சிமட்டும் விசேஷமாகச் செய்துகொண்டிருக்கின்றது. நாம் நித்திரையின் இயற்கையைப்பற்றித்தெரிந்து கொள்ளவேண்டுமானால்,முக்கியமாய் மூளையைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது ஆவசியகம்.

அப்படியே அதைப்பற்றிப் பல பரிசோதனைகள் நடந்தன. மண்டைவைத்தியம் அவசியமாய்ச் செய்யவேண்டியதருணம் வாய்த்தபோது மனிதர்களுடைய மூளைகளையும் பரீக்ஷைசெய்தார்கள். அப்படியே நாய்முதலிய ஜந்துக்களின் மண்டையோட்டை அறுத்து அதற்குப்பிரதி அவ்விடத்தில் ஒரு கண்ணாடியை மூடிவைத்து, மூளையில் அவ்வப்போது உண்டாகும் பலவித மாறுபாடுகளும் நன்றாய்க்கண்ணாலே பார்க்கப்பட்டன. விழித்துக்கொண்டிருக்கிற காலங்களில் மூளையில் ரத்தம் நிறைந்து ஓடுவதாகத் தெரியவருகின்றது; மேலும் அக்காலத்தில் மூளை மண்டையோட்டில் பலமாய்த்தானே தாக்கிக்கொண்டிருக்கிறது. அதனால் மண்டையோட்டை அறுத்துவிட்டால் மூளைதானே வெளிப்படும்படி ஆகிறதேயொழிய மண்டையோட்டுக்குப்பிரதியாக அங்கே வேறொன்றும் உண்டாவதற்கில்லை.

அப்படியே நன்றாய்த்தூங்குங்காலங்களில் மூளை சிறிதும் ரத்தமில்லாமல் வெளுத்துப்போகிறதென்றும்,பருத்து மண்டையில் தாக்காமல் அடங்கியிருக்கிறதென்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதிவேகமாய் மூளையிலோடுகிற ரத்தவோட்டம் பெரிதும் நின்று போவதினலேதான் மெய்ம்மறந்து தூக்கம் வருகிறதென்பது இதனல் தெளிவாகின்றது. மேலும் தூங்குகிறகாலங்களில் கனவு உண்டாவதும்,அதுகாரணமாய்ப்பிதற்றல் முதலியவை உண்டாவதும்,இரத்தம்அதிகமாக மூளையிற்போய் உதைவதனல் ஆகின்றனவென்பதுங் கண்டறியப்பட்டது. இதனல் கனவுகாண்கிறகாலங்களில் உணர்ச்சியுண்டாக்குகிற உறுப்புக்களுக்கு ஒருபங்குவேலை உண்டெனத்தெரியவருகிறது. ஒரு மனிதன் கனவுகாணும்போது அவனுக்கு நல்ல தூக்கமென்றுசொல்லக்கூடாது. அப்போது அவன் ஒருவாறு விழித்துக்கொண்டுதானிருக்கிறன். ஆயின் நன்றாய் விழித்துக்கொண்டிருப்பதற்கும் கனவுகாண்பதற்கும் உள்ள விசேஷமென்னவெனில், கனவுகாணும்போது சில உறுப்புகள் வேலைசெய்யாமல் அடங்கியிருக்கின்றன; அதனல் அதன் நினைவு மறுபடியும் செம்மையாய் வருவதில்லை. ஏதோ ஒரு கலக்கமான தோற்றமாய்த் தெரியவருகிறது.

நித்திரையென்பது யாவர்க்கும் இயற்கையாகவே உண்டாயிருக்கிறதென்றாலும்,தேகசௌக்கியத்தை மிகவும் விருத்திசெய்வதனல் நித்திரையின் சவுக்கியமும் விசேஷமாய் விருத்தியாகும். தினந்தோறும் நல்ல காற்றுள்ள வெளிகளில் தேகப்பயிற்சிசெய்வதாலும், காற்றுக்கு அபிமுகமாய் வாகனங்களில் ஊர்ந்துசெல்வதாலும், மிதமாய்ப் புசித்து அஜீர்ணப்பொருள் தங்கவொட்டாமல் இரைப்பையை இலகுவாக வைத்துக்கொண்டிருப்பதாலும், விசேஷமாக மனக்கவலையற்றிருப்பதாலும் அமைதியாய் நித்திரையுண்டாகும். மிதமிஞ்சின தேகவருத்தமும் அளவுகடந்த உண்டியும் குடியும், தக்க தேகப்பயிற்சி செய்யாமலிருப்பதும், அதிகமான மனக்கவலையும் இப்படிப்பட்டவை யெல்லாம் நித்திரைக்குக் கெடுதியானவை. மிகவும் ஒடுக்கமானவிடத்திலாவது ஜனங்கள் நெருங்கியவிடத்திலாவது சுவாஸம் விடுவதும் நித்திரைக் கெடுதிதான். நித்திரை வருவதற்கு அதிகவெப்பமும் கூடாது; அதிகக்குளிர்ச்சியும் கூடாது. நடுத்தரமாக இருக்கவேண்டும்.

தூங்குவதற்குச் செம்மையாய்ப் படுக்கவேண்டியவிதம் எப்படியெனில், கைகளை மார்பின்மேலணைத்துக்கொண்டு இடதுபக்கமாயாவது வலதுபக்கமாயாவது தலையணையின்மேல் தக்கபடி தலையை உயரவைத்துப் படுக்கவேண்டும்; இடதுபுறமாய்ப்படுப்பதே உத்தமம். மூச்சு சிறிதும் வாய்வழியாய் வரவொட்டாமல் நாசியின்வழியாலே வரும்படி வாய்நன்ருக மூடப்பட்டிருக்கவேண்டும். வாயைத் திறந்தபடியே தூங்கச் சிலர் வழக்கம்பண்ணியிருக்கிருர்கள். அந்தக் கெட்டவழக்கத்தாலேதான் மிகவும் அருவருப்பான குறட்டை முதலிய விகாரங்கள் உண்டாகின்றன. நன்ருய்ப்படுக்காமல் சாய்ந்தபடியே தூங்குகிற வழக்கத்தை விலக்கவேண்டும். இல்லாவிட்டால் அதனுல் குறட்டை உண்டாவதுமன்றி விகாரமானகனவுகளும் உண்டாகும்.

படுக்கும்போது மனம் ஒரே நிலையிலிருக்கவேண்டும். அதிகமான சிந்தைகள் தூக்கத்தைக்கெடுக்குமாதலால் அக்காலத்தில் மனத்தை நிம்மதியாக வைத்திருக்கவேண்டியது அவசியம். தேகசவுக்கியமில்லாமையால் நல்லதூக்கம்பிடியாமல் தவிக்கிறவர்களுக்கு அதற்காக பலவைத்தியங்களும் செய்வதுண்டு. நல்லதூக்கம் பிடிப்பதற்குச் சரியாகச் செய்யவேண்டிய உபாயம் என்னவெனில், ஒன்றின்மேலொன்ருய் வீண்சிந்தைகள் மனதில் ஓடாதபடி ஏதோ ஒருமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அதேசிந்தையாயிருக்கவேண்டும். அப்படியிருந்தால் சீக்கிரமே நித்திரைபிடிக்கும்.

மூதன்முதல் நித்திரை தேகத்தின் ஒரு முனையிலேதான் ஆரம்பிக்கிறதென்பது யாவர்க்கும் தெரிந்திருக்கலாம். முதலில் கால் உறங்குகின்றது; பிறகுதான் மற்ற அவயவங்கள் உறங்குகின்றன. அதனுல் சீக்கிரம் நித்திரை வரவேண்டுமென்ருல் மனதை நிம்மதியாய் வைத்துக்கொண்டிருப்பதுடன், காலையும் அசைக்காமல் வைத்திருக்கவேண்டும். மேலும் கால்கள் போதுமானவளவு சூடுகொண்டிருக்கவேண்டும். இதற்காகவே சீததேசங்களில் சஞ்சரிக்கிறவர்கள் அநேகர் இராக்காலங்களில் தீமூட்டி அதன்பக்கத்தில் காலைவைத்துக்கொண்டுபடுக்கிருர்கள்.

இவ்விதமாக நித்திரையென்பது முக்கியமாக மூளையின் நிலைமையைப் பற்றியிருக்கிறதாகவிருந்தாலும், நித்திரையை தம்பிஷ்டப்

படி கையாளச் சிலர் வழக்கப்படுத்தியிருக்கிறார்கள். அது மிகவும் ஆச்சரியமானது. அவர்கள்வேண்டுமென்றால் நித்திரைவரும், வேண்டாமென்றால் போய்விடும். பிறஞ்சுதேசத்து மகாசூரனான நெப்போலியன் என்பானிடத்தில் இந்த அற்புதமான சக்தியிருந்ததாகப் பிரசித்தி உண்டு. அவன் மகாயுத்தம் செய்தகாலங்களில், வழக்கப்படி செம்மையாய் இளைப்பாறப் போதுமான ஒழிவுகிடைப்பது அருமையாதலால், தன் இஷ்டப்படி ஒழிவுநேரிட்டபோது அரைமணியோ கால்மணியோ நித்திரைசெய்து, அப்படியே அளவிட்டநாழிகை கழிந்தவுடனே மறுநிமிஷத்தில் தப்பாமல்விழித்துக் கொள்வான். ஆனால் அப்படிப்பட்ட சிறந்தசாமர்த்தியம் விசேஷப் பழக்கத்தால் வருவதேயன்றி வேறன்று. ஆயினும் அப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ளவர்களைக் காண்பதரிது. சாதாரணமாய் அப்பியாசத்தினாலேயே நித்திரைவருகின்றது. சிலர் நாள்தோறும் பன்னிரண்டுமணிநேரம் தூங்குகிறார்கள். சிலர் பத்துமணிநேரம் தூங்குகிறார்கள். சிலர் எட்டுமணிநேரம் தூங்குகிறார்கள். சிலர் ஆறுமணிநேரம் தூங்குகிறார்கள். சிலர் நான்குமணிநேரம் தூங்குகிறார்கள். இவையெல்லாம் அப்பியாசத்தால் வருவதேயொழிய வேறென்ன? தேகத்தில் எவ்வளவு அசௌக்கியமாயிருந்தாலும் எவ்வளவுவெளிச்சமிருந்தாலும் எவ்வளவு சத்தமிருந்தாலும் ஒருவனுக்கு அதிகமான இளைப்பும் சோம்பலுமிருந்தால் உடனே நித்திரை வந்துவிடும்.

பிராணிகளுக்கு நித்திரையேன் உண்டாகவேண்டுமென்கிறீர்களோ? விழித்துக் கொண்டிருக்கிற காலத்தில் கண்கள் திறக்கப்பட்டிருக்கின்றன; ஒருவன் எழுந்திருக்கின்றான்; ஒருவன் நடக்கின்றான்; ஒருவன் வேலைசெய்கின்றான்; ஒருவன் புசிக்கின்றான், குடிக்கின்றான். முக்கியமாய் யாவரும் ஏதாவது ஒன்றை நினைக்கின்றார்கள். இந்த வேலைகளுக்கெல்லாம் ஜீவாதாரமானமுயற்சி அதிகமாக வேண்டியிருப்பதனால், இவை ஒவ்வொன்றும் அதற்குத் தக்கவளவு சரீரபுஷ்டிக்கும் சௌக்கியத்திற்கும் வேண்டிய வலிமையை அபகரிக்கின்றது; இவை எல்லாவற்றுள்ளும் எண்ணமிடுவதுதான் அவ்வலிமையை அதிகமாகக் கவர்கின்றது; மேலும் பிராணாதாரமான சக்தியை இழுத்துக்கொள்ளுகின்றது. ஜீவசக்தி இவ்விதமாக குறைவுபட்டுப்போ

னால், மிகவும் ஓய்ச்சல் உண்டாகி எல்லாச் செயல்களும் அடங்கிப் போகின்றன. அதனாலேதான் நித்திரை உண்டாகின்றது. இப்படி அந்தமுயற்சி ஓயாமல் மேன்மேலும் தூண்டிக்கொண்டே இருக்கவுங்கூடும். ஆயினும் அது, வரும்படியில்லாமல் கையிருப்புப்பொருளையேகொண்டு காலங்கழிக்கவும் கூடுமென்று சொல்வதுபோலிருக்கிறதேயொழிய, வேறன்று. ஆதலால் ஜீவமுயற்சி குறைவு படுவதற்குத் தகுந்தபடி நாம் அதைப் பெருக்கிக்கொண்டுவாராதபோனால் திடீரென்று சரீரத்திற்கே அபாயமுண்டாம். தேகசௌக்கியத்தை நிலைநிறுத்தவேண்டுமானால், விழித்துக்கொண்டிருக்கிற வேளையில் ஜீவாதாரமான சக்தி எவ்வளவு செலவான்றதோ அதற்குத்தக்கவளவு தூக்கமிருக்கவேண்டும். முன் செலவான முயற்சியெல்லாம் தூங்கும்போது மறுபடியும் நன்றாய்த்திடப்படுவதனால், திரும்பவுந் தூங்கியெழுந்து உழைக்கும்படியாகின்றது. தேகமுயற்சியைப்பார்க்கிலும் மனமுயற்சி அதிகமாக ஜீவாதாரசக்தியைக் குறைப்பதால், அந்தக் குறையைத் தீர்க்கும்படி அதற்கு அதிகமாகவே நித்திரையும் வேண்டியிருக்கின்றது.

நித்திரையும் அதற்குரிய விசித்திரமான தேகதத்துவங்களும் இப்படிப்பட்டவையென்று இப்போது நமக்குத் தெரிந்தனவல்லவா? விழித்துக்கொண்டிருக்கும்வேளையில் மூளையிலே ரத்தம் அதிகமாக மோதுகின்றது; சற்றுநேரம் அந்தவேகம் நின்று ரத்தஓட்டம் இல்லாமல் மூளை வெளுத்து அதனால் மெய்ம்மறப்பு உண்டாகின்றது; அதுதான் நித்திரையென்று தேகதத்துவசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். தூங்கும்போது மனதுக்கு ஒருவேலையும் இல்லையென்றே தோற்றுகின்றது. மேற்பார்வைக்குத் தோன்றுகிறபடியே தூங்குகிறகாலத்தில் மனதுமுழுதுமே முயற்சியற்றிருக்கிறதோ இல்லையோ, என்பதைப்பற்றி விசாரிப்பது மிக்க நன்மையானது. விழித்துக்கொண்டபோது அதைப்பற்றி நமக்கு யாதொன்றும் தெரியாமலிருக்க, தூக்கத்தில்மட்டும் மனது ஓயாமல் வேலைசெய்துகொண்டிருக்கிறதென்றால் அஃது எவ்வளவு அதிசயமானது. ஆய்ந்துபார்த்தால் உண்மை அப்படித்தான் இருப்பதாகத் தோன்றுகின்றது.

மனிதர்கள் விழித்துக்கொண்டிருக்கும்போது எல்லாம் தெரிந்துகொள்ள வல்லவர்களாயிருந்தும் வேறொரு பொருளின் உதவியில்

*

லாமல் தம் மனத்தைக்கொண்டே காலத்தின் அளவைமாத்திரம் தெரிந்துகொள்ளத் திறமையற்றிருக்கிறார்களல்லவா? இது மிகவும் ஆச்சரியமானது. யாவரும் தத்தம் வழக்கப்படி சில மணிநேரம் நித்திரைசெய்து பின்பு எழுந்திருக்கிறார்களென்பது ஓர் அதிசயமன்று; முன் உழைப்பினாற் குறைந்துபோன உயிர்முயற்சியெல்லாம் இளைப்பாறித் தூங்குங்காலத்தில் திரும்பவும் நன்றாய் உறுதிப்படுத்தப்பட்டு அதிக சுறுசுறுப்பு உண்டாவதனால் அப்படியாகின்றது. மனிதர்களுக்குக் காலத்தின் அளவை மனதினாலே நிதானக்கிற திறமையில்லையாதலால், நித்திரை கொள்வதற்குமுன் நாம் நித்திரைசெய்யப்போகிற காலம் இவ்வளவென்று கண்டறிவது ஒருவர்க்கும் கூடாதெனத் தோன்றுகின்றது; சரியாய் இத்தனைமணிநேரம் கழித்து எழுந்திருக்கவேண்டுமென்று உத்தேசங்கொண்டுபடுத்தால், அந்தக்காலத்தைச் சரியாக மனதினால் கணக்கிட்டுக்கொண்டிருந்து எவராவது குறித்தகாலந் தப்பாமல் எழுந்திருக்கவல்லவர்களா?

ஆயினும் நித்திரைசெய்யும்பொழுது மனதிற்கு இந்தச் சக்தி உண்டென்று நம்பப் பலநியாயங்களிருக்கின்றன. வழக்கமாய் உதயமானபின்பே எழுந்திருப்பவர்களாயிருந்தாலும், விடியநான்குமணிக்கோ ஐந்துமணிக்கோ எந்தக்காலத்தில் எழுந்திருக்கவேண்டுமென்று முதனாள் இராத்திரி உத்தேசித்துக்கொண்டு படுக்கிறார்களோ, அதேகாலத்தில் அநேகர் எழுந்திருக்கக் கண்டிருக்கிறோம். இந்தநிமிஷத்தில் எழுந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு முதனாள் ராத்திரிப்படுத்து அதேகாலத்தில் எழுந்திருப்பதை யாவரும் வழக்கப்படுத்திக்கொள்ளலாம். விழித்துக்கொண்டிருக்கையில் மனிதன் எல்லாம் தெரிந்துகொள்ள வல்லவனாயினும், தன் வீணாலோசனைகளால் கெட்டவழியில் இழுக்கப்பட்டு, காலவளவைச் சரியாகக் கண்டுபிடிக்கச் சக்தியற்றவனாயும், அதற்காக வேறொன்றின் உதவியையே தேடுகிறவனாயுமிருக்கிறான்; தூங்குகிறவனோ, தன்னினைவு தனக்கில்லாமலும், சத்துருமித்திரனென்று அறியமாட்டாமலும், பக்கத்தில்நடக்கிற செய்கை ஒன்றையும் கண்டுகொள்ளக்கூடாமலும், இப்படிக்கெல்லாமிருந்து, காலவளவைமட்டும் சரியாகக்கண்டுகொள்ளுகிறான். ஒன்றும் அறியாதவன்போலப் படுத்துத்தூங்கின

னும் முதனுள் இரவிற் படுக்கும்போது குறித்த நிமிஷத்திற்குத் திடீரென்று எழுந்திருக்கிறான். நித்திரைசெய்கிற காலத்தின்மட்டும் மனதிற்கு இந்தச் சக்தியிருப்பது மிகவும் அற்புதமானது. நித்திரையில் இன்னும் பல விசித்திரமான செயல்களுண்டென்றாலும், நித்திரைசெய்கிறகாலத்தை மனதினால் கணக்கிடுகிற திறமையைப்பார்க்க அதிக விசித்திரமானது வேறொன்றுமில்லை.

௨

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

—:o:—

(முற்றொடர்ச்சி.)

திருநாவுக்கரசுநாயனார் புராணம்.

---

(௧) வளர்கின்ற திருத்தொண்டினெறிவாழ, ஞானத்தவமுனிவராய வாகீசர் திருநாவுக்கரசு நாயனாராகத் திருவவதாரஞ் செய்த உண்மை விளங்குகின்ற பெரிய கீர்த்திபொருந்திய சிறப்பைப்பெரிய உலகத்திலே என்னொரு நாவுக்குச்சொல்ல இயையாததை அறியாதவனாகிய நான் சொல்லத் தொடங்குகின்றேன்.

(௨) வளத்தையுடைய திருமுனைப்பாடி நாடு, பழையமுறைப்படி வருகின்ற மண்ணின் றுகளையன்றி வேறொருதுகளில்லாத நன்மைநிலைத்த ஒழுக்கத்தினாலுஞ் சிறந்த குடிகள் விருத்தியடைந்து முடியிலே சந்திரனை யணிய வளர்ந்த அழகிய மாடங்களையுடைய செழுமையான நகரங்கள் நிலையாக நிறையப்பெற்றது.

(௩) குறிஞ்சி நிலத்துள்ள கூட்டமான இரத்தினங்களோடும் முல்லை நிலத்துள்ள நறிய புதுமலர்களின்மிகுதியை அளவிறந்த திரைகள் சுமந்து கரைப்பக்கத்தே பெரிய எருமைக்கடாக்கள் பூண்ட கலப்பையினினமாகிய கூட்டங்களாலுழுகின்ற வயல்களி

லெறிந்துலாவி எவ்வுலகத்தாரும் அழகை மதிக்கவருகின்ற பெண்ணை நதிபெருகும் வளமிகும்.

(௪) சால்-உழவுசால்.

(௫) மள்ளர்கள் நெருங்கிய வயலிற் குறைத்த குறைக்கருப்பு பொழிந்த கொழுஞ்சாறு, கொம்புகளுக்கிடையிடையே கட்டியதேன்கூடு கிழியச்சொரிந்தொழுகுந் தேன்வெள்ளத்தோடு பக்கத்தே பரந்து வண்டொலிக்கப் புதுநீரைப்போல மடையை யுடைப்பன; அங்ஙனமுடைபட்ட மடைகளை வெல்லக்கட்டிகளால் அடைப்பார்கள்.

(௬) வளநிறைந்த மருதநிலத்தில் வினைஞரார்ப்பொலி பதாதியைவிளக்க. பலம்-சைனியம்.

(௮) வாசனை பொருந்திய மலர்களை மேயும்படி கரிய சமுத்திரத்துட்படிகின்ற இடியையுடைய மேகம் போல, நெருங்கிப் பாய்கின்ற கரிய கன்றைப்போலப் பரிய சரீரத்தையும் சிவந்த கண்களையுமுடைய வரான்மீன்கள் மடியில் முட்டப் பால் சொரிகின்ற கரிய எருமைகளால் திரையை யுடைய வாவி கரைபுரள்வன.

(௯) கூட்டமான வண்டுகள் சூழ்ந்த வரிசையானது முழுத்த நீல வளையல்களைப்போலலைய, சிவந்த தளிர்கள் நறிய விரலைப்போலவும், செழிய முகைகள் நகத்தைப் போலவுஞ் சிறந்திருக்க, சரீரத்தினொளியினிழலைப் பார்க்குங் கண்ணாடியைப்போல வெள்ளிய சந்திரனைக் கையாற் பூமிதேவியணைத்தாற்போ லுயர்வன மலரையுடைய சோலைகள்.

(௧0) மதில் சூழ்ந்த வளநகரமெங்கும் உள்ள மணந்தங்கும் வயலிற்பொருந்திய பயிர் சிறந்த இடங்களிற் பரந்திருக்கும் நெற்கூடுகளிலும் காந்தி பொருந்து மொளியையுடைய மிருதுவான குண்டலங்களை யணிந்த பெண்களிருக்கின்ற மாடங்களிலும் பொருந்தி முகிற்கூட்டங்களும் மயிற்கூட்டங்களும் கண்டோர் மயங்கப் பக்கத்திலாடும்.

(௧௨) ஏனைய பல ஊர்களும் எந்நாளும் மெய்ம்மையான வளமோங்கவரும் மேன்மையின; அவற்றுள் சைவநெறியை ஏழுலகத்

தும் பரப்பும் தன்மையால் தெய்வத்தன்மை பொருந்திய வழியாகிய நன்மையைப் பெருக்கும் செல்வம் உண்டாகுமூர் திருவாரூர் என்பதாம்.

(௧௪) நீலமலரை வயல்கள் காட்டும், சந்திரன் போன்ற முகம் கரிய நீலமலர் போன்ற கண்ணைக்காட்டும், பரந்த நெடிய வீதி ஆட்டப்படும் அழகிய ஊசல் பலவற்றைக்காட்டும், இருள்புலர்தற்குரிய நீலநிறத்தைக் காட்டும், வைகறைப்பொழுது உழவரொலியைக்காட்டும், அளவிறந்த பெருவளங்களைப் பாத்திரமிக்க வீடுகள் காட்டும்.

(௧௬) சிறப்பினுளராகிய புகழனார் உளரானார்.

(௧௯) மேன்மைதக்க தொழிலை, சிறக்க, விரும்பிய பாராட்டோடு குற்றமற்ற பலசுற்றத்தார் செய்ய.

(௨0) மருணீக்கியாருடைய தலைமயிர் நீக்கும் மணவினையையும் தெருளினீர்மையையுடைய பல மானுடர் களிசிறக்கப் புரிந்தபின், பொருளை வெள்ளமாக வீசி, அறிவுகொள்ளும்படி மனத்தரும்புஞ் சுருளைநீக்கி மலர்விக்கின்ற வித்தையைப் பயிலத்தொடக்கினார்கள்.

(௨௨) ஆறிரண்டின் முன்னுகை—பன்னிரண்டு வயசு வர.

(௨௩) ஆண்டகைமைத்தொழில்—போர்த்தொழில்.

(௨௬) அரசனுக்கு ஆபத்து வந்தபொழுது போர்த்தொழிலை மேற்கொண்டு கொடிய யுத்தத்துக்கு விடைபெற்றுப் போனவரும்.

(௨௭) பழைமை தொடங்கி நிலையாதஇவ்வுலகை விட்டுவினைப் பயனுற் கொடிய துன்பத்தை அனுபவித்து.

(௨௮) நாயகனிறந்தால் நாயகியுமிறத்தல் வேண்டுமென்னுந் தன்மையானுடனே எக்காலத்தும் பிரியாத உலகத்தை எய்துகின்ற கற்பு நெறி வழுவாமல் கணவனாரோடுடன் சென்றார்.

(௩0) பொருவாரும்—பொருதல் நிறையும்.

(௩௧) தம்முடைய சோற்றுக்கடனைக் கழித்த பெருங்கீர்த்தியைப் பூமியிலுள்ளோர் கூற. அமருலகம்—அமரருலகம்.

(௩௪) அம்பொன்மணி நூல்-திருமங்கலியசூத்திரம். இம்பர் இவ்விடம்.

(௩௫) தேசநிலேயாமையாகிய நெறியைக்கண்டு.

(௩௭) நிலேயாத இல்வாழ்க்கையிற் செல்லேனென்று. சமயங்களுட் சற்சமயமாகிய சைவத்தை யறிந்து தெளியச் சிவபெருமான் அருளாமையினல்.

(௩௮) குறி - நூல். அது, "ஒருகுறிகேட்போன்"என்னுஞ் சூத்திரத்தா னுணர்க. இனிக் குறி என்றதற்கு "உள்ளே நுழைந்து நோக்கும்போதுவீணய் வெளிக்குமாத்திரம் உண்மைபோலத் தோன்றும் ஏதுக்களே" என்பாருமுளர்.

(௩௯) துங்க முழுவுடல் - உயர்ந்த பருத்த உடம்பு.

(௪0) சித்தநிலே நெறி - உண்மைவழி.

(௪௪) புனிறகன்ற - ஈன்றணிமை நீங்கிய.

(௪௫) குறைந்து - குறையிரந்து.

(௪௯) இறை அளவுபழுதின் - சிறிது பழுதுண்டாயிருந்தமையால். ஆளத்தொடங்கும் கண்டரு நெற்றியரருள.

(௫௩) புண்பொருந்திய தலேயையும் வலிய முருடுடுத்தனத்தையுமுடைய சமணர்கள் தீர்க்குந்திறத்தை யறியாது வாடி. பரிபவம் - அவமானம்.

(௫௫) ஊட்டுவான் - சமையற்காரன்.

(௬௧) கைதருவார்தமையூன்றி - கைகொடுப்போரைத் தமக்குப் பற்றுக்கோடாக ஊன்றி. கைகொடுப்போர் மிகவும் அன்பினராயிருந்தமையால் இவரது இச்செய்கையைப் புறத்திலே வெளிவிடாதிருந்தாரென்க.

(௬௭) உருவார - உடம்புமுழுதும்.

(௬௮) திருமெழுக்கு - சாணம்.

(௭0) வேதியரைக் குறித்து. மயங்குதற்கேதுவாய மாயை யறுக்கும்படியும், போற்றுதலாற் பிற்காலத்தெழுலகின்வரும் துயரும் நீக்கும்படியும் எதிரே நின்று பாடினர்.

(௭௧) அடியேனுக்குபிரோடருளைத் தந்ததென்று. தெருட்சி மருட்சி - ஞானமயக்கம்.

(௭௨) அயர்வாராய் இவ்விடத்து யான் செய்த பிழையால் ஓர் காலும் ஏறக்கூடாத பெரிய திடரிலேற.

(௭௩) எதிர் செய்குறை - கைம்மாறு.

(௭௫) என்று தெளிந்து ஞானமிருந்தும் அறியாத அத்தன்மையனை இராவணனுக்கனுக்கிரகஞ் செய்த அதனுடைய மெய்த் தன்மையை யறிந்து.

(௮௨) விருத்தி - சர்வமானியம்.

(௮௩) லங்கனம் - தாண்டுதல்.

(௮௬) அடிகள் - ஆசிரியர்.

(௮௭) நடையாடுந்தொழிலுடையார் - நடைப்பிணங்களானவர்.

(௯0) பொருள்கொண்டு - பொருளைக்கைக்கொண்டு.

(௯௬) சுழலுந் தன்மையை யுடைய இரும்பாற் செய்த தாளிட்டு.

(௧0௬) தெவ்விடத்துச் செயல் - பகைவரிடத்து முறைகோடிச்செய்யுஞ் செயல்.

(௧0௮) செற்றவனை - நஞ்சமயநிலையைக் கெடுத்தவனை; இவனது மந்திர சாதனையை இவனிடத்தில்லாமல் நாம் நீக்க.

(௧0௯) கோபாதிசயம் - அப்பட்டத்து யானையின் பெயர்.

(௧௧0) ஒப்பற்றவலிய அந்த யானை கூடத்தைப் பிடுங்கி, ஓர் மலையைப்போலப் புறப்பட்டு; மாடங்களை இடித்து, மண்டபங்களை யெடுத்தழித்து, கால்களுடைய பாய்தலால்,

(௧௧௧) கழுத்திற் கட்டியிருக்குங் கயிறும் காலிற் பூட்டி இருக்குஞ்சங்கிலியும் அறத் தறியைமுரித்து மேலே சுற்றிய பட்சிசாலம்

அஞ்ச உண்டைகளுக்கு விலகி ஊசல் போன்ற கை எதிரே சுழலக் கோபித்துப் பரிக்காரரை உழக்கி வாசனை பொருந்திய மதமழை முற்பட மதயானை எதிரே வரும்.

(௧௧௪) வெருட்சி மிக்க இடபம்.

(௧௧௮) தொடக்கி-மீள

(௧௨௧) முட்டிநிலை-மந்திரசாத்திரம். எதிரேறு-வலி. போக-இறக்க. பரிபவம்-அவமானம்.

(௧௨௪) பவ்வம்-சமுத்திரம்.

(௧௨௯) இருவினைக்கயிற்றால் மும்மலமாகிய கல்லைக்கட்டுதலால் வருகின்ற பிறவிக்கடலில் வீழ்கின்ற மானுடர்களேற அருளுகின்ற பஞ்சாக்ஷரமானது.

(௧௩௭) சாற்றல்-மங்கலதூரியங்களைப் படுத்தல்.

(௧௫௮) முதிர்ந்த எருமைகள் வாசனை நெருங்கிய இதழ்களுடைய தாமரைத்தடாகத்தில் புதிய மலர்களை மேயும் அருகிலே நெருங்கிய வனம்போல மிகுந்துயர்ந்த மூங்கிலளவாகப் பெருகும்படி வளரும் கரும்பு பெருகிக் கணுக்களால் முதிர்ந்த முத்தைச் சொரிதல் திருநாவுக்கரசரது வடிவைக்கண்டுருகி அன்பு மிகுகின்ற நீரைக் கண்பொழிவன வென்ன முன்புள்ளன.

(௧௬௦) சிவமுன்பயில் மொழி-நன்மை பொருந்திய வசனங்கள்.

(௧௬௮) தருப்பாட்டிலே விருத்தத்திருமொழி என்று ஆசிரியர் கூறிய தேவாரம் "கருநட்ட கண்டனை" என்பதைமுதலாகவுடைய பதிகத்தை.

(௧௭௧) கண்ணீர் விபூதியில் வண்டலாட.

(௧௭௪) படப்பு-கொல்லை.

(தொடரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை.

உ
சிவமயம்.

திருக்குறட

பரிமேலழகருரை விளக்கம்.

முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து.

அஃதாவது...............................வுணர்க.

விளக்கம்:—கவி-புலவன். அவற்றால்-அக்குணங்களால். இவை பு-தொடர்பு. அறமுதலியவற்றைச் சிறப்புவகையாற் கூறினார்க்கு அங்ஙனமே அம்மூவரையும் சிறப்புவகையாற் கூறலே முறையாம்; பொதுவாகக் கூறினாரென்றல் பொருந்தாதெனின், நன்று கூறினாய்; அங்ஙனம் கூறின் மூவரும் ஒருவரென்பது தோன்றாதாகலின் பொதுவாகக்கூறினாரென்றலே பொருத்தமுடைத்தென்க. ஆசிரியர்க்கும் அதுவே கருத்தாதல் 'ஆதிபகவன்' எனக்கூறியதனானே நன்கு தெளியப்படும்.

க. 'அகரமுதல......................புலகு.

இதன்பொருள், எழுத்தெல்லாம்............முதலே யுடைத்து என்றவாறு.

இது.....................................கூறப்பட்டது.

வி-ம்:—எழுத்தெல்லா மென்பது ஈண்டு அகரமொழிந்த உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களுமாகிய அவற்றின் றொகுதியை யுணர்த்திநின்றது. 'மெய்யினியக்கமகரமொடு சிவணும்' என்பதனான் மெய்யெழுத்துக்கள் அகரத்தானியங்குமென்பது பொருந்துமேயன்றி ஏனையுயிரெழுத்துக்கள் அகரத்தானியங்குமென்பது பொருந்தாதென்பார்க்கு அவையும் அதனானே இயங்குமென்பார் எழுத்தெல்லாமென்றார். இனி, எல்லாமென்ற பொதுமையானே வடவெழுத்துங் கொள்ளப்படும். என்னை? வடவெழுத்துக்களும் அகரமாகிய முதலையுடைமையானென்பது. பிறபாடையெழுத்துக்கள் கூறப்படா

தொழிந்த தென்னையெனின் அவை அக்காலத்துப் பெருவழக்குடையன்வல்லவாதலானும் ஆதிபாடைகளன்மையானுமென்பது.

அகரமென்றது, உயிரெழுத்துக்களுள் முதனின்ற அகரவுயிரை. இது நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறப்பது. நாதமாவது பாசரீரத்தினின்றும் சுத்தமாயாவிருத்தியாய்த் தோன்றும் வியஞ்சகவொலி. இந்நாதத்தின்கண் சூக்குமமாயிருந்து தோன்றும் ஏனையஎழுத்துக்களெல்லாம் இதன்கண் முதற்றோன்றிய அகரவொலியினொலியக்கப்பட்டு அதனோடுசேர்ந்து புறத்தே தோன்றுமென்க. சூக்குமை முதலிய நான்குவாக்கினுள்ளும்; சூக்குமையிலே அதிசூக்குமமாயிருந்த எழுத்துக்கள், பைசந்தியில் மயின்முட்டையிற்சலம்போல வெவ்வேறாய் வடிவுவிளங்காமையையும், மத்திமையில் வெவ்வேறாய் வடிவுவிளங்குதலையும், வைகரியிற் செவியிற் கேட்குமாறு தனித்தனிபுறத்தே தோன்றுதலையும் உடையன என்க. எனவே சூக்குமையின் காரியம் பைசந்தியும், பைசந்தியின் காரியம் மத்திமையும், மத்திமையின் காரியம் வைகரியு மாதலால் அகத்திசைக்குமெழுத்துக்களே புறத்துமிசைக்குமென்பது தோன்றுதல் காண்க. சூக்குமையெனினும் நாதமெனினு மொக்கும். இங்ஙனம் அகத்திசைக்கு மெழுத்துக்களே புறத்துமிசைக்கு மென்பது தோன்ற "அகத்தெழுவளியிசை......................எழுந்துபுறத் திசைக்கும் ....நுவன்றிசினே" எனத் தொல்காப்பியனாரும் கூறுதல் காண்க. நச்சினார்க்கினியரும் 'மெய்யினியக்கமகரமொடுசிவணும்' என்னும் தொல்காப்பியச்சூத்திர விசேடவுரையின்கண் இக்கருத்தமையவே கூறியருளினார்; அதனானுமறிக. இதனானே அகத்திசைக்குமகரமே புறத்துமிசைக்கு மென்பதும் அதுவே ஏனைய எழுத்துக்களுக்கு நிமித்தகாரணமென்பதும் பெறப்பட்டன. அங்ஙனேல் அகரவெழுத்தென்றுவது அகரவுயிரென்றுவது கூறுவார் ஆசிரியர்மன்: அங்ஙனம் கூறாமையின் அகரம் பிறிதென்பார்க்கு; 'பூவுக்குட்டாமரை' சிறந்ததென்புழித் தாமரைப்பூவென்னாமையின் அதுவும் பிறிதென்பது படுமாதலானும், அகரவுயிர்போலறிவாகியெங்கு—நிகரிலிறை நிற்கு நிறைந்து' எனப் பிறர் விதந்து கூறுமிடத்து முரணுதலுறுமாதலானும் அதுபொருந்தாதென மறுக்க.

முதல என்பது முதல் என்னும் பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; முதல் முதன்மையையுடையது; முதன்மை தலைமை, அஃதாவது கருத்தாவாந்தன்மை. அகரத்திற்குக் கருத்தாவாந்தன்மை நாதமாத்திரையானே தோன்றி ஏனைய எழுத்துக்களை இயக்குதலாற் கொள்ளப்படும். இதுபற்றியே பரிமேலழகரும் விசேடவுரையின் கண் 'அகரத்திற்குத்தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும்..................கொள்க' என்றார். இயக்குதல் கூறிற்றிலர் எனின்; நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலாற் றலைமைகூறவே இயக்குந்தன்மையும் அதனாற் பெறப்படுதலானும்; முதல் என்ற சொல்லாற்றலானும் அது விளங்கிக்கிடத்தலானும் அது கூறிற்றிலர். என்னை? சுருக்கி விளக்கலே அவர்க்கியல்பாதலினென்பது. இங்ஙனம் அகரம் இயக்குங் கருத்தாத்தன்மைக்கே உவமையாதலை, 'அகரவுயிர்போலறிவாகியெங்கு—நிகரிலிறை நிற்கு நிறைந்து' எனவும், 'அக்கரங்கடோறுஞ்—சென்றிடுமகரம்போல நின்றனன் சிவனும் சேர்ந்தே' எனவும், 'அக்கரங்களின்றுமகரவுயிரின்றேல்' எனவும், 'அக்கரங்கட்கெல்லாமகரவுயிர் நின்றாற்போன்—மிக்கவுயிராய்மேவினேம்' எனவும், வராவராணாம் ஜகதாம் ஸர்வேஷாம் ப்ராண உச்யதே । வ்யோமகஜாதிநாநாரூப வாக்ஷராணாம் கோரவஜ ॥ எனவும், பிறர்கூறுதலானுமறிக.

உலகு என்பது ஈண்டு உயிர்கண்மேனின்றது. என்னை? இயக்க இயங்கும் விசேடவுரிமையையுடையன அவையே யாகலினென்பது. ஏனைய அசேதனப்பிரபஞ்சமோ எனின்—அவையும் இவைஇயங்குதற்கு முதற்காரண துணைக்காரணங்களாயமைந்து உதவுமுகத்தானும்; உலகு என்னும் பொதுச்சொல்லானும் கொள்ளப்படும். இயங்குதல் ஈண்டு அறிவுபெற்று நடத்தன்மேற்று. இக்கருத்துப்பற்றியே பிறரும் 'அகர வுயிர்போ லறிவாகி யெங்கு—நிகரிலிறை நிற்கு நிறைந்து' எனவும், 'அக்கரங்கட்கெல்லாமகரவுயிர் நின்றாற்போன்—மிக்கவுயிராய் மேவினேம்' எனவும், வராவராணாம் ஜகதாம் ஸர்வேஷாம் ப்ராண உச்யதே । எனவும் 'மன்னுசிவன் சந்நிதியின் மண்ணுலகஞ் சேட்டித்த" என்பதன் விசேடவுரையில் 'உலகம் ஈண்டு உயிர் கண்மேனின்றது' எனவும் கூறுதல் காண்க. 'இன்னும் உயிர்

களுக்கே இயக்கப்படும் விசேட வுரிமைகொடுத்து ‘ஒடுங்கிமலத்துள தாம்’ எனவும், ‘அவையே தானேயாயிருவினையிற்—போக்குவரவு புரியவாணையி—னீக்கமின்றி நிற்குமன்றே’ எனவும், கந்ஹ்ஸந்ர ஷ்டிகாநந்: கதாகஸோநவராத:கரோதிலாவஸ்யதிபவாவா ஸூஜயாவஸேவதயா ॥ எனவும் கூறுதல்காண்க. அசேதனப் பிரபஞ்சத்திற்கு அறிவுபெறுதலன்றித் தொழிற்படன் மாத்திரம் கொள்ளப்படும்.

ஆதி என்பது முதல்வன் என்னும் பொருளைபுணர்த்திப் பகவனென்பதை விசேடித்து, பகவப்பெயருடையார்க்கெல்லாம் ஆதியாய் நின்ற பகவன் என்னும் பொருளைக்குறிப்பித்து நின்றது. அங்ஙனேல் பகவப்பெயருடையார் பலராவான் செல்லுமன்றோ எனின்; அன்று; என்னை? ஆதிபகவனருளானே பகவப்பெயரடைந்தாருமுளராதலின் அவரையே ஈண்டு பகவப்பெயருடையார் எனக்கூறினேமாகலினென்பது. இங்ஙனமே பிறரும் ‘வேதக்காட்சிக்கும்........ ஆதிக்காதியாய்’ எனக்கூறுமாறுகாண்க. இதுபற்றியே மாதவச்சிவஞானயோகிகளும் ‘சீர்காளிறை யொன்றுண்டத் தெய்வநீயென்றெப்பாற்—சோர்விலடையாற்றெளிந்தோம் சோமேசா—வோரில்—அகர முதலவெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றேயுலகு’எனக் கூறியதூஉமென்க.

பகவன் அறுகுணமுடையவன். அஃது ஈண்டு ஆதியென்னும் பதத்தான் விசேடிக்கப்பட்டுத்தன்னருளானேபகவப்பெயர் அடைந்தாராய் முத்தொழிலியற்றுமூவர்க்குமாகியாய்நின்ற பகவன்என்னும் பொருளை உணர்த்தி நின்றதென்க. எனவே அம்மூவராயு நின்று உலகியற்றுவோனும் அவரொடுங்குதற்குக் காரணனுய சங்கார காரணனும் அவனே என்பது பெறப்பட்டது. இதுபற்றியே கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தை விளக்குமிடத்து’ ‘மூவாகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான்....................இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனவுணர்க’ எனப் பரிமேலழகர் கூறியதூஉமென்க.

முதற்று என்பது முதல் என்னும் பெயரடியாகப்பிறந்த குறிப்பு வினைமுற்று. முதல்—கருத்தா. இதனை மெய்கண்டதேவர் ‘சங்

காரகாரணனாகிய் முதலையே முதலாகவுடைத்து' எனவும், 'ஒன்றலா ....ஈறேமுதல்' எனவும் சிவஞானபோதத்தின்கட் கூறுமாற்றானறிக. இனி முதல் என்பதற்குக் காரணமெனப் பொருள் கூறுவர். இவற்றிற்கும் அங்ஙனமே கூறுவாரேல்; அஃது அச்சிவஞானபோத முதற் சூத்திரத்தோடும் அதன் முதனூலாகிய வடமொழிச் சிவஞானபோத முதற்சூத்திரத்தோடு மாறுபடுதலின் அது பொருந்தாதென்பது. இக்கருத்துப்பற்றியே பரிமேலழகரும் 'ஆதிபகவனாகிய முதலையுடைத்து' என விரித்ததூஉம், 'இதனால் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது' எனக்கூறியதூஉமென்க. அன்றியும் முதல் என்பதற்குக் காரணமெனப்பொருள் கூறின் அது முதற்காரணமெனவுங் கருதநிற்குமாதலின் அது பொருந்ாதென்பது.

தலைமை கருத்தாவாந் தன்மை. அது 'உலகம் யாவையுந் தாமுளவாக்கலு-நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா—வலகிலா விளையாட்டுடையாரவர்—தலைவர்' என்பதனானும், 'உலகெலாமாகி........ தலைவனாய்' என்பதனானுமறியப்படும். உவமையாவது ஒருபுடையொத்தலாதலின் எழுதப்படாத எழுத்தை உவமை கூறல்வேண்டுமென்பது பொருந்தாதென்க. அன்றியும், குடம் குயவனாகிய வினைமுதலையுடைத்து அதுபோல, உலகம் ஆதிபகவனாகிய வினைமுதலையுடைத்து என்புழிக் குயவனும் காணப்படாதவனாயிருத்தல்வேண்டும்; அங்ஙியதி ஆண்டின்மையானும் அது பொருந்தாதென்பது. 'விகாரத்தானன்றி' என்றதனால் இயல்பாற் பிறக்கும் அகரத்தானே இயக்கப்பட்டு விகாரத்தாற் பிறப்பன ஏனைய எழுத்துக்களென்பதும் 'செயற்கைபுணர்வானன்றி' என்றதனால் முற்றுணர்வுடையோனாலியக்கப்பட்டுச் செயற்கை புணர்வுடையன உயிர்களென்பதும் பெறப்படும். இதனானும் 'உலகு ஈண்டு உயிர்கண்மேனின்றது' எனப்பரிமேலழகர்கூறியது பொருத்தமாதல் தெளியப்படும். உலகு பலபொருளொரு சொல்லாதலின் ஈண்டுயிர்கண்மேனின்றதென்றார். முதற்கடவுளதுண்மை எதனாற் பெறப்பட்டது எனின்; உலகு (காரியப்படுதலால்) ஆதிபகவனாகிய முதலையுடைத்து என்பதனாற் பெறப்பட்டது. பரிமேலழகர் ஏதுக் கூறாமைக்குக் காரணம் 'சுருக்கிவிளக்கலே' எனமுன்னர்க் கூறியுள்ளாமாதலின் ஈண்டுக் கூறவேண்டியதின்றென்பது. (தொடரும்.)

சி. கணேசையர்.

புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.

ஒற்றுமை.

"வீடக மாக விளைந்தொல்லை வேண்டுமேல்
கூடகத்திற் சோதியோ டொன்று." ஔவைகுறள்.

ஒற்றுமை = ஒன்று + மை. ஒன்று என்பதின் வல்லொற்று மெல்லொற்றாகி, மை என்னுந்தன்மையை யுணர்த்தும் விகுதி புணர்ந்து ஒற்றுமை யென்றாயது. சர்வ வியாபகராய் எங்கணும் நிறைந்த சாக்ஷாத் கடவுள் சர்வ நன்மையோடும் ஒற்றுமையுடையவர். அவரியற்றிய, பஞ்சபௌதிக வடிவமான சடப்பொருள்களனைத்தும் தத்தமில் ஒற்றுமையுடையனவே. எவ்வாறெனில், பலதுகள் தூசிகளின் அணுக்கள் ஒன்றுகூடிப் பிண்டீகரித்து, மண், கல், மரமாதி பிருதிவிபூதமும், அம்புராசித்திரள்களின் பல அணுக்கள் ஒன்றித்து கனீகரணமடைந்து கருமுகில்கள், ஆலங்கட்டி, உறைபனியாதி, கரைகாணச்சமுத்திரங்களாய் அப்புபூதமும், சூரிய, சந்திர, தாராகணங்களாதி ஒளிப்பிழம்புகள் ஒன்றித்தலினாலாய தேயுபூதமும், ஆகாயமாகிய வணுக்கள், அடர்ந்திணைதலினால் வாயுவாதி அகண்ட விசும்புபூதமும், ஆகியவுருப்பெற்றுப் பாரித்திருத்தல், அவ்வப்பரமாணுக்கள் பலவடர்ந்து செறிந்து ஒன்றுதலின் பான்மையே. வான மண்டலங்களிலுள்ள சோதிமண்டலங்களின், ஒழுங்கான கிரகசுற்றோட்டத்தாலும், பூமியின் கிரமமான கரிமமத்தியம (Center of gravity) கருடணத்தாலும் உண்டாகும் ஒற்றுமையால், இவ்வாறு இராப்பகல் சீதோஷ்ணம், காலவேற்றுமை பருவங்கள் அயனங்கள் மாறாது, ஒருதன்மையாய்ப் பரிவர்த்திக்கின்றன. இப்பஞ்சபூதங்களும் அப்பூதகர்த்தாவின் சாயலுமடங்க வொற்றுமையுடையன, இம்மாயவுடதேகமும், அதில் மாண்புடனியங்கும் சித்துப்பொருளாகிய சூக்கும ஆன்மாவுமாம். இப்பூதவுடம்போ பாதாதிகேசமீறாயுள்ள கண் காது வாய் மூக்கு, கை, கால் முதலிய பல அவயவங்களைக் கொண்ட ஓர் அவயவி. இவ்வங்கத்திற்கும் அவ்வவயவங்களுக்கும் எவ்வாறாய், ஒற்றுமையுண்டாயிருக்கிறதென்பது கூர்ந்து கவனித்தற்பாலது.

ஓருறுப்பு நோயுற்றால், மற்ற வுறுப்புகள் தமக்கென்னவென்று சும்மாவிராமல், ஒவ்வொன்றும் தனக்கேயுற்றதாய்க்கருதி, அந்நோய்களைய வேற்றசூழ்ச்சியாவுந் தானே புரிகின்றது. திருட்டாந்தமாகக் காலில் முள் தைக்கக் கடுகி உடல் குனிந்து, வளைந்து, துவண்டு, கை பரிசித்து, அம்முள்ளைப் பிடுங்கி வேதனையைத் தணிக்கவும், கண் கலுழ்ந்து அவ்வேதனைக்காயிரங்கவுங் காண்கின்றோம். இவ்வாறே கடவுள் நம்மையும் அவரில் ஓருறுப்பான கண்காலாதிபோல, அரசர் சாமானியராகிய பல அவயவங்களாகச் சிருட்டித்திருக்கின்றார். சரீரமெல்லாம் கண்ணாயிருந்தால், கேள்வியெங்கே? எல்லாம் செவியாயிருந்தால், மோப்பம் எங்கே? ஆனாற், கடவுள் தமது சித்தப்படி உறுப்புகளொவ்வொன்றையுஞ் சரீரத்தில் ஏற்றபெற்றியமைத்திருக்கின்றார். கண்ணானது கரத்தை நோக்கி, உன் உதவி எனக்கு வேண்டியதில்லை என்றும், தலையானது கால்களை நோக்கி, நீங்கள் எனக்கு அவசியமில்லையென்றுஞ் சொல்லக்கூடாமல் ஒன்றினுதவி பிறிதொன்றுக்கவசியமாவதுபோல், அரசர், அறிஞராதி உயர்ந்தோர்களின் உதவி மத்திம சாமானியருக்கும், மத்திம சாமானியரினுதவி அரசராதி ஆன்றோர்க்கும் ஆவசியகமாயிருக்கின்றது. பானை, சட்டி, குடம், கலயம் முதலியபலவாறான மட்கலங்கள் சமையலுக்கு ஏற்ப உபயோகப்படுவனவன்றி, ஒரே விதமான பானைபாத்திரங்கள் அவ்வவற்றிற்குரிய தொழில் ஒன்றிற்கே யுரியனவாகும். அவ்வாறே உலகம் பலவிதமாய், வீரிய பராக்கிரமத்தால் விளங்கும்விறல்வேந்தரும், கல்வியறிவால் மிக்க கலைவல்லோரும் பிரபுக்களும், பிரஜைகளும், ஏனைய இழிசனரும் பாமரரும், மத்திமரும், சாமானியருமாகவே, ஏற்றக்குறைவாக இலௌகிக வியாபாரம் ஒற்றுமையாய் நடந்தேறும்பொருட்டு, தெய்வசங்கற்பத்தால், ஓர்கால் வலியார்மெலியாரெனவும் மெலியார் வலியாரெனவுமாயினும், எல்லோரும் ஏககாலத்தில் வலியோருமெலியோரும் ஆகாமற் சுழன்றுவரம்பு கடவாதிருக்கும்படி யாக்கப்பட்டனரென்றே, கொள்ளக்கிடக்கின்றது. கடவுள் மனிதரைத் தமது சித்தத்துக்கொத்தவண்ணம் பல நிலையினராக வமைத்திருத்தல், நமக்கு நன்மைபயக்கும் ஒற்றுமை கருதியேயென்க. குயவனிட்டப்படி பல்வேறு பானை சட்டி, முதலியவகையாய் ஆக்கப்பட்ட கலங்கள் இவ்வாறு எம்மை ஏன் விபரீதமாக வனைந்தா

யென்று அவனைக் கேட்கக்கூடாததுபோல, யாமும் நமது பல வேறுபட்ட உலகநிலையை வினைப்பயனென்று கொள்ளாது, தேவதிருவுளத்தின் பிறழாதநீதியென்றே கருதற்பாலது. இவ்வித வேற்றுக்குறைவின்றி யெல்லாரும் மன்னவராகவுயர்ந்தோராயின் அம்மன்னரின் மாகாரியம் பார்க்கும் மந்திரி, பிரதானி, சேவகர், ஊழியர், உத்தியோகம் புரிபவர் யாவர்? அல்லாமல் எல்லாரும் ஏழைகளாயின், அவ்வேழைகளின் வேலைகளையும் ஏவலூழியங்களையும் ஏற்று, அவர்க்கு உற்ற சமயத்தில் ஊன்று கோல்போலாகி உம்பள சம்பள, ஊதியமளிப்போர்யாவர்? தவிரவும் ஒருவற்கு,

> "ஆங்காலமெய்வருந்த வேண்டாம்.........தேங்
> காய்க்கிளநீர்போல் வாய்க்குமே."
> "அடுத்துமுயன்றாலும் ஆகுநாளன்றித் தொடுத்த கருமங்களாகா."
> "வருந்தியழைத்தாலும் வாராதவாரா பொருந்துவன போமினென்றாற்
> (போகா."

என்னும் மூதுரைகளின்படி விதியின்பயனே பயனாகக்கொளினும்,

> "தெய்வத்தானாகாதெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலிதரும்."

என்றபடி ஊழில்லாவிடினும் முயற்சியே பலனைத்தரும்.

> "பொறியின்மையார்க்கும் பழியன்றறிவறிந்
> தாள்வினையின்மை பழி."

யாவர்க்கும் விதியில்லாமை பழியாகாது, ஒற்றுமையான முயற்சியில்லாமையே பழியாகும்.

> "ஊழையுமுப்பக்கம் காண்பருலைவின்றித்
> தாழாதுஞற்றுபவர்."

இடைவிடாது ஒற்றுமையாய் முயற்சிசெய்வோர்விதியையும்விலக்குவர் என்னுந் தெய்வப்புலமைத்திருவள்ளுவருரைப்படி தெய்வகிருபை மனத்தால் நாமிவ்வுலகவங்கத்தில் எவ்வுறுப்பினராயிருப்பினும் அங்ஙனமுற்ற நிலையில் திருப்தியடைந்து, எல்லாவற்றினும் மேலாய்க்கடவுளைச் சிநேகித்தும் பிறர்சிநேகத்தோடு மற்றவர் சுகதுக்கங்களை நம்மவைகளாய்க்கொண்டும், ஓரங்கம்போல வொத்தொழுகுவோமாயின்,

"இடர்தீர்த்தவெள்ளாமை, கீழினஞ் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும்பழிப்பி—னடை தீர்த்தல்
கண்டவர்காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர் நூல் வேண்டாவிடும்." ஏலாதி.

பிறருடைய துன்பத்தைப்போக்குவதும், பிறரை நிந்தியாமையும், கீழ்மக்கள் கூட்டத்தைச்சேராமலிருத்தலும், எல்லாருக்கும் பசி முதலான வருத்தங்களைப் போக்குதலும், நிந்தனையுள்ள நடக்கையை யொழிப்பதும், காணப்பட்டவர்கள் விரும்பும்படியான சொற்களைச்சொல்லுதலும், ஆகிய இப்படிப்பட்ட குணங்கள் ஒருவனிடமுண்டானால், இவையே போதுமானதால் வேறுசாத்திர விதிகளை அனுட்டிக்க வேண்டுவதில்லை என்று ஆன்றோர் கூறுப. ஈண்டுப் பிறர் சிநேகக்கிரியைகள்மட்டுமேகூறி, எல்லாவற்றினும் மேலாய் தேவசிநேகக்கடமை கூறுதொழிதல் எவ்வாற்றாலோவெனின்: தேவசிநேகமில்லாவிடத்துப் பிறர்சிநேகமும், பிறர்சிநேகமில்லாவிடத்துத் தேவசிநேகமுமின்றாதலின், ஒவ்வொன்றிற் பிறிதொன்று பெறப்படுவதாகவே கொள்ளப்படும். இவையே சாதாரண சத்தியமறையின் பத்துக்கற்பனைகளின் சாராம்சமாகிய புதிய துவித கற்பனைகளுமாம். அவையாவன.

(1) எல்லாவற்றையும் பார்க்கச் சர்வேசுரனைச் சிநேகிக்கிறது.

(2) தன்னைத்தான் சிநேகிக்குமாறு மற்றவர்களையும் சிநேகிக்கிறது.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."

என்னுந் திருக்குறளுக்கிலக்கணமாகவும்,

"அன்புடையாரென்பு மரிந்தளிப்பார் தன்னுயிரோ
டென்புடைய மெய்யெல்லாமீர்துண வென்பாண்யாமே
யீய்ந்துணவென்றெவ்வுயிர்க்கு மெவ்வுணவை மீட்டியிவண்
வேய்ந்துணத்தானுண்ணிரந்த நீயல்லால் வேறியாரே."

என்னுந்தேட்பாவணியார் திருவுரைக்கிணங்கவும், தமதுயிரோடுடலையுந்தந்தெமைப்புரந்த புரவலனாகிய கிறீஸ்துபெருமான், தமது சீடர்களுக்கு நலமாய்க்கொடுத்த புதிய கட்டளையுமிதுவே.

"நான் உங்களைச் சிநேகித்ததுபோல, நீங்களும் ஒருவரொருவரைச் சிநேகிக்கக்கடவீர்கள்" (அருளப்பர் X III--34.)

இப்புதிய உடன்படிக்கையோடு, மேற்கூறிப்போந்த துவிதசிநேகக்கற்பனைகளிரண்டும்,

(1) உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே, நமக்கு முன்பாக வேறே சர்வேசுரன் உனக்கில்லாதே போவதாக.

(2) சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவீகரியாதிருப்பாயாக.

(3) சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத்தக்கதாக நினைப்பாயாக.

(4) பிதாவையும் மாதாவையுஞ் அடுத்திருப்பாயாக.

(5) கொலைசெய்யாதிருப்பாயாக.

(6) மோகம் அகமியாகமனம் பண்ணுதிருப்பாயாக.

(7) களவாடா திருப்பாயாக.

(8) பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

(9) பரதாரத்தை அபேட்சியா திருப்பாயாக.

(10) பரருடைமையை அபேட்சியா திருப்பாயாக.

என்னும் பத்துக்கற்பனைகளையுந் தம்முள் அடக்கி யொற்றுமையுடையனவாயிருத்தல் தெற்றெனவுய்த்துணர்தற்பாலதாம். எங்ஙனமெனின்; நாம் கடவுள்பேரில் கொண்டிருக்குஞ் சிநேகமானது, பிரபஞ்சத்தெப்பொருளின் மேலும், நாம் கொண்டிருக்குஞ் சிநேகத்தைவிடமேலானதாயிருத்தல் வேண்டும். அக்கடவுட் சிநேகமும், பிறர்சிநேகமுமின்மையே, கொலை, காமம், களவாதிய பத்துக்கற்பனைக்கு விரோதமான குற்றங்களைச்செய்தற்குக் காரணமாதலுங் காண்க. இயற்கைப்பொருள்களுள்ளே இயற்கைக்கிரமமாயேற்பட்ட இவ்வொற்றுமை, யந்திர, சூத்திர, கடிகாரமாதிசெயற்கைப்பொருட்களில், அவ்வவற்றின் அவயவங்களாகிய சக்கரம் முதலியவுறுப்புகள் இசைவுபெற்று ஒற்றுமையாய் உடன்சுற்றிப் பின்னப் படாமலிருக்

குமளவே நிலைத்திருந்து ஒழுங்குபட்டுச், சிறிதுபழுதுறவே சின்னபின்னப்பட்டுச் சிதைந்தழிவதும்போல், இவ்வுலகபொதுஜனசமூகவுடலின் அவயவங்களாகிற உறுப்புகளில் உட்பகையாகியகேடுறலே, அவ்வொற்றுமை சீர்குலைந்து முற்றுமே பழுதுறுமென்பதை,

> "ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
> பொன்றாமை யொன்ற லரிது."
> "எட்பகவன்ன சிறுமைத்தேயாயினும்
> உட்பகையுள்ள தாங்கேடு."

என்னும்பொய்யாமொழியார் புரைதீர்மொழிகளே புலப்படுத்துகின்றன. இக்கூறப்பட்ட ஏதுக்களைக்கொண்டு யாமும் ஒருடலில் பலவுறுப்புகள்போல வொற்றுமைபூண்டு, உட்பகையறுத்துச் சற்குணத்தராய்ப் பிரபஞ்சத்திற்கேபுரிய பல்வேறுஜாதி மதாபிமானங்களைந்து, பிறருதவியை யெதிர்பாராது, தன்வயத்தனுய்ச்சுயம் பிரகாசமாய்ச் சர்வநன்மைச்சுரூபியாக விளங்கும் சர்வேசுரனேடொற்றுமையுடையராய், லோகோபகாரமாய், நல்லவைபுரிந்து அல்லவையொருவி, மறுமையிலவரோடு நித்திய மோட்ச சாம்பிராச்சியத்தில் நீடூழிவாழ்க என அந்திமலனின்னருளை வெடிது சிந்திப்போமாக!

M. ஜோஸப்டையாஸ்.

புத்தகக் குறிப்பு.

ஸ்ரீ மகாபாரதம்:—ஐந்தாவது வேதமென்றும், உலகத்திலுள்ள நூல்களில் பெரியதென்றும் புகழப்படுவதும், ஸ்ரீவேதவியாச பகவான் அருளியதுமான ஸ்ரீமகாபாரதத்தின் அருமை பெருமைகளைப்பற்றி இந்நிலவுலகில் அறியாதவர் யாவர்? உலகம்போற்றும் ஞானசாஸ்திரமாகிய ஸ்ரீ பகவத்கீதையைத் தன்னுள் அடங்கப்பெற்ற மகாகிரந்தம் இதுவெனின், இதற்கு வேறு புகழ்ச்சியுங்கூறவேண்டுமோ? இம்மகாகிரந்தம், நம் தேசபாஷைகளேயன்றி, ஆங்கில முதலிய பாஷாந்தரங்களிலும் மொழிபெயர்க்கப்பட்டுப்போவாவுடன் படிக்கப்பெற்று வருகின்றது. நந்தமிழ்மொழியில், பாரதக்கதைகளைக் கூறும் நடைப்புத்தகங்கள் வழங்குகின்றனவாயினும், அவை, ஸ்ரீவேதவியாசபகவான் அருளிய மூலகிரந்தத்தின் மொழிபெயர்ப்பென்றேனும், அதனுட்கூறப்படும் கதைகள்தர்மங்கள் முதலியவற்றை ஒன்று

விடாது கூறுவனவென்றேனும் கொள்ளமுடியாது. இவ்விஷயம், அவ்விரண்டனையும் வைத்து ஒப்புநோக்குவோர்க்கு நன்கு விளங்கும். இதனால் தமிழ்நாட்டார்க்குமட்டும், அம்மகா இதிகாசத்தின் அருமைபெருமைகளை உள்ளபடியே அறிந்துகொள்ள இந்நாள்வரை கூடாதுபோயிற்று. இப்பெருங்குறையை நீக்கவேண்டுமென்னும் எண்ணம் அறிஞர் பலர்க்குத் தோன்றியிருக்கக்கூடும். ஆயினும் ஒருபெருங்கருமத்தைத் துணிந்துசெய்து புகழும் புண்ணியமும் அடைவதற்குரியர் மிகச் சிலரேயன்றிப் பலராகார். அம்முறைப்படி, இவ்வரிய செயலை மேற்கொண்டு நடத்தும் புண்ணியமும் புகழும், கும்பகோணம் காலேஜ் ஸமஸ்கிருதபண்டிதர் ஸ்ரீ. உபய. வே: தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்கட்கும், டௌநகரம் நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. உபய. வே: ம. வீ. இராமாநுஜாசாரியர் அவர்கட்கும் வாய்த்திருக்கின்றன. இவர்களிலே, முன்னவர், மூலகிரந்தத்தைத் தமிழில் மொழிபெயர்ப்போராகவும், பின்னவர் அம்மொழிபெயர்ப்பை ஆராய்ந்து சுத்தமாகப் பதிப்பிப்போராகவும் அமைந்திருத்தல், இம்மொழிபெயர்ப்பினிடத்து நம்முழுநம்பிக்கையும் மதிப்பும் வைத்தற்கு முக்கிய காரணங்களாகின்றன. ஏனெனின், அவ்விருவரும், வடமொழி தென்மொழிக் கலைகள் நிரம்பிய பெரும்பண்டிதர்களாயிருத்தலாலேயாம். இப்போது தனித்தனி 200- பக்கங்கொண்ட இரண்டு சஞ்சிகைகள் இன்னோர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இம்மொழிபெயர்ப்பு, மூலத்தின் எதிரொலிபோல ஒத்துவிளங்குவதுடன், இதன் வாசகநடை பண்டிதபாமரரெல்லாம் விரும்பிப் படிக்கத்தக்க இனிமை மிகுதி வாய்ந்துளது. இதனுடன் கடிதமும் அச்சுங் கண்கவர்வனப்பினவாய் நூற்பெருமையை அலங்கரிக்கின்றன. இங்ஙனம், சகலதர்மங்களும் அடங்கப்பெற்ற மகாநிதிபோன்ற இவ்விதிகாசம், மேற்குறித்த பண்டிதர்களது விடாமுயற்சியால் நிறைவேறி வெளிவருமாயின், தமிழ் நாட்டாரது ஞானபிவிர்த்திக்கு இதனினும் சிறந்த பெருஞ்சாதனம் பிறிதில்லை எனலாம். ஆதலால், அன்னோர்களை இப்பெருமுயற்சியில் மேன்மேலும் ஊக்கியுதவல் தமிழ்நாட்டாரது முக்கியமான கடமைகளில் ஒன்றாம். இத்தகைய லோகோபகாரமான காரியம் இனிது நிறைவேறும்படி ஸர்வேசுரன் திருவருள் பெருகுவதாக. இரண்டு மாதத்துக்கொருமுறை 200 - பக்கங்கொண்ட சஞ்சிகைகளாக இந்நூல் வெளிவருமென்று தெரிகின்றது. தனிச் சஞ்சிகையின் விலை அணா 12. வேண்டுவோர்:— "ஸ்ரீமாந். ம. வீ. இராமாநுஜாசாரியர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், நேடிவ் ஹைஸ்கூல், கும்பகோணம்" என்றவிலாசத்துக் கெழுதிப்பெற்றுக்கொள்க.

பத்திராசிரியர்.